# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2022 ஆம் ஆண்டு மே மாதம் புதன்கிழமை நாள் 25.05.2022 காலை 10.30 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ .எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றிஅவசரக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள்: 1**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான தளவாட பொருட்கள் தற்போது மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதாக தெரிவி த்து, உடனடியாக தளவாடப் பொருட்கள் வாங்கி வழங்கிடுமாறு நான்கு கோட்ட சுகாதார அலுவலர்களால் கோரிக்கை கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | தேவைப்படும் பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | **மூங்கில் மிளார்**<br>அடிப்பாகம் 2 அடி அகலத்துடன் தென்னை குச்சிகளால் இரண்டு குறுக்கு பட்டைகள் மற்றும் கத்தாழை பின்னல்களுடன் 5 அடி உயரமுள்ள கல் மூங்கில் கைப்பிடியுடன் கூடிய உறுதியான மூங்கில் மிளார். | 1380 |
| 2 | **MS PIPE கைப்பிடியுடன் கூடிய மூங்கில் கைபிரஸ்**<br>12" நீளமும் 2 1/2 " அகலமும் அடர்த்தியான உயரமான உறுதியான நார்களுடன், 5 அடி நீளமுள்ள MS PIPE கைப்பிடியுடன் கூடிய கைபிரஸ் | 1000 |
| 3 | **விளக்குமார்**<br>அதிக நீளமுள்ள அதிக எண்ணிக்கை கொண்ட தென்னை குச்சிகளால் ஆன விளக்குமார் | 3260 |
| 4 | **மண் வெட்டி**<br>14 கேஜ் (14 Gauge) தரமுள்ள உறுதியான இரும்பு தகட்டிலான 8" அகலமும் 10" நீளமும் கொண்ட கெட்டியான உறுதியான மரப்பிடியுடன் கூடிய மண்வெட்டி. | 660 |
| 5 | **அகப்பை**<br>20 கேஜ் (20 Gauge) துருப்பிடிக்காத தகட்டினாலான 6" விட்டம் உள்ள அகப்பை வடிவத்துடன் 5 அடி நீளமுள்ள கல்மூங்கில் கைப்பிடியுடன் கூடிய சாக்கடை கரண்டி. | 1090 |
| 6 | **கை ஓடு**<br>20 கேஜ் (20 Gauge) GI தகட்டிலான 9" நீளமும் 5.5" அகலம் வளைவுடனும், மேல்புறம் மடக்கப்பட்ட நிலையில் கைபிடியுடன் கூடிய கை ஓடு. | 1705 |
| 7 | **அரிவாள்**<br>9" நீளம் கூர்மையுடனும் 6" இரும்பு கைப்பிடியுடனும் மொத்தம் 15' நீளமுள்ள உறுதியான கனமுள்ள இரும்பு அரிவாள் | 255 |
| 8 | **கடப்பாறை**<br>15" விட்டம் 5 அடி உயரமுள்ள 8 பட்டைகளுடன் கூடிய உறுதியான இரும்பு கடப்பாறை | 160 |
| 9 | **நான்கு பல் பிக்ஆக்ஸ்**<br>12 மி.மீ (12m.m) M.S கம்பியிலான 11" நீளம் 9" அகலத்துடன் ஒரு முனை கூர்மையானதும் மறுமுனை கைப்பிடி பொருத்துவதற்கு ஏதுவான அமைப்புடனும் உறுதியான மரக்கை பிடியுடன் கூடிய முள் கரண்டி. | 240 |
| 10 | **அலுமினிய கூடை**<br>18" விட்டம் 10" உயரமும் உடைய, 500 கிராம் எடையுள்ள உறுதியான கெட்டியான அலுமினியக் கூடை | 1050 |
| 11 | **முள் கொக்கி**<br>1' நீளமும் 6" அகலமும் 7 பல் கொண்ட 9" SS கைப்பிடியுடன் கூடிய முள் கொக்கி | 895 |
| 12 | ஒளிரும் சட்டை (மாநகராட்சியின் பெயர் மற்றும் சின்னம் பிரிண்ட் செய்யப்பட்டது) | 2300 |
| 13 | கையுறை (பலமுறை பயன்படுத்தக்கூடிய ரப்பர் கையுறை) | 2840 |
| 14 | Gumboot | 400 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள தளவாட சாமான்கள் கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ள தளவாட சாமான்கள் விநியோகம் செய்யும் நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் மதிப்பீட்டுத் தொகை ரூ .4250000/–ஆக கணக்கிடப்பட்டது . மேற்கண்ட பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ42,50,000/–க்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவீனத்தினை 2022–2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட தலைப்பு எண்2303005 ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் ஏற்கலாம்.

எச்2/4158/2022 (மையம்)

**தீர்மானம் எண் : 27 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 2**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22 அறிவிப்பு எண்.16ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, 30.12.2021ம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அரசாணை (டி) எண்.**497** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**28.12.2021**ல் பஞ்சப்பூரில் பின்வரும் திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கு முதற்கட்ட அனுமதி அளிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து கீழ்கண்ட பட்டியலில் காணும் பணிகளை மேற்கொள்வதற்கு M/s. Grant Thornton Bharat LLP(Lead Member) in association with Vistar AEC Consultants LLP, Karnataka நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டப்பணிகளின் விபரம் | **மதிப்பீட்டுத் தொகை ரூ. கோடியில்** |
|---|---|---|
| 1) | ஒருங்கிணைந்த பேருந்து முனையம் (Integrated Bus Terminal) | **159.00** |
| 2) | கனரக சரக்கு வாகன முனையம் (Truck Terminal) | **65.90** |
| 3) | பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் (Multi Utility Facilities Centre) | **84.78** |
| 4) | சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள்.(Roads, Storm Water Drain and other Infrastructure facilities) | **40.30** |
| | மொத்தம் | **349.98** |

மேற்கண்ட நான்கு திட்டப் பணிகளுக்கு ரூ.349.98 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ள**தில், மேற்கண்ட திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கு அரசின் நிர்வாக அனுமதிம் பெறுவதற்கு நடவடிக்கைகள்** மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி **வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு :**

**மேற்கண்ட நான்கு திட்டப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்**

**இ1/4343/2021(மையம்)**

**தீர்மானம் எண்: 28 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் உபயோகத்திற்காக மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டுவரும் மார்க் II கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் உள்ள கைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் சரிசெய்து பொ து மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படா வண்ணம் பராமரிக்க மார்க் II கைப்பம்புகளுக்கு தேவையான உதிரிபாகங்கள் மைய மண்டியில் வாங்கி வைத்து கையிருப்பில் வைக்கப்பட்டு வருகிறது . மேற்படி கைபம்புகளுக்கு தேவையான உதிரி பாகங்கள் சில இனங்கள் முற்றிலும் தீர்ந்த நிலையில், சில இனங்கள் மிக குறைந்த அளவிலும் உள்ளதால் கீழ்கண்டுள்ள உதிரி பாகங்களை தமிழக அரசு சார்பு நிறுவனமான மெசர்ஸ் . டான்சி டூல் மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறாமல் நேரடியாக கொள்முதல் செய்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருட்களின் விவரம் | ஒன்றின் விலை | தேவைப்படும் எண்ணிக்கை | மொத்த தொகை (ரூபாயில் |
|---|---|---|---|---|
| **1** | **32mm dia Pipe 3 mtr. Long without coupling** | **1200.00** | **500 Nos** | **600000.00** |
| **2** | **32mm dia GI Coupler** | **100.00** | **500 Nos** | **50000.00** |
| **3** | **Connecting Rod 3 mtr. long** | **470.00** | **500 Nos** | **235000.00** |
| **4** | **Cylinder Assembly** | **3835.00** | **100 Nos** | **383500.00** |
| **5** | **Pump Bucket (VT)** | **50.00** | **300 Nos** | **15000.00** |
| **6** | **Upper valve Assembly** | **2360.00** | **60 Nos** | **141600.00** |
| **7** | **Flange Bolt Nut (M12x40)** | **21.00** | **1000 Nos** | **21000.00** |
| **8** | **Head with cover & Third Plate** | **3585.00** | **50 Nos** | **179250.00** |
| **9** | **Water Tank** | **2100.00** | **50 Nos** | **105000.00** |
| **10** | **Handle Assembly** | **3100.00** | **50 Nos** | **155000.00** |
| **11** | **Stand (T)** | **4450.00** | **20 Nos** | **89000.00** |
| **12** | **Chain with Coupling** | **230.00** | **500 Nos** | **115000.00** |
| | **Total** | | | **2089350.00** |
| | **Provision for 12 items GST & SGST 5% on 2089350.00** | | | **104467.50** |
| | **Total** | | | **2193817.50** |
| | **Unforeseen items and contingency , petty and supervision charges** | | | **6182.50** |
| | | | | **2200000.00** |

**அலுவலக குறிப்பு**

1. தமிழக அரசின் அரசு சார்பு நிறுவனமான டான்சி டூல் மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருச்சி என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.22.00 இலட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்திட அனுமதிக்கலாம்
2. 2022–23 ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 2305009 குடிநீர் வழங்கும் பணிகள் பராமரிப்பு செலவினங்கள் என்ற கணக்கு தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1200.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ளலாம்

**இ6/11953/2021(மையம்)**

**தீர்மானம் எண்: 29 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**<u>பொருள்: 4</u>**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டத்திற்குட்பட்ட 2022–2025ம் மூன்றாண்டுகால 8 குத்தகை இனங்களில் 3 குத்தகை இனங்கள் 13.04.2022 அன்று மூன்றாவது முறையாக மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கலந்து கொண்டவர்கள் விபரம் பின்வருமாறு :–

<table>
<tr><th>வ. எண்.</th><th>வருடம்</th><th>தொகை ரூ.</th><th>மூன்றாண்டு சராசரித் தொகை ரூ</th><th colspan="2">பெயர் மற்றும் முகவரி</th><th>ஏல கேள்வித் தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>குறிப்பு</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td colspan="2">5</td><td>6</td><td>7</td><td>8</td></tr>
<tr><td></td><td colspan="8">**குத்தகை இனம் எண். 2 – "ஏ.எஸ்.ஜி.லூர்து சாமி பிள்ளை மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள பொருட்கள் வைப்பு அறையில் வைக்கப்படும் பொருட்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்**</td></tr>
<tr><td rowspan="5">1</td><td rowspan="2">2019 – 2020</td><td rowspan="2">515000</td><td rowspan="5">462918</td><td colspan="4">**24/03/2022, 31.03.2022ல் கலந்து கொண்டவர்களின் விபரம்**</td><td rowspan="5">2. இனம் (2)க்கு 24.03.2022ம் தேதியன்று நடந்த பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் ஒருவர் மட்டும் கலந்து கொண்டார். அதில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.3,65,003/– மூன்றாண்டு சராசரி தொகையைவிட குறைவாக உள்ளது. எனவே மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என அறிவிக்கப்பட்டது.<br>இதனை தொடர்ந்து 31.03.2022ம் தேதி நடைபெற்ற மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மறு ஒப்பந்தப்புள்ளியில் இருவர் கலந்து கொண்டனர். அதில் சராசரி மூன்றாண்டு குத்தகை தொகையை விட குறைவாக கேள்வித் தொகை பெறப்பட்டது. எனவே நிர்வாக நலன் கருதி துறைமூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆகவே இக்குத்தகை இனத்தை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என அறிவிக்கப்பட்டது.<br>மூன்றாவது முறையாக மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் ரெங்கராஜ் என்பவர் ரூ.4,00,500/– என்று குறிப்பிட்டுள்ளார். இத்தொகையானது 2021–2022ம் ஆண்டு குத்தகைதாரர் மற்றும் துறை ரீதியான வசூல் செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 3,33,005/– ஐ விட குத்தகைத் தொகை ரூ.67495/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை ரூ.62418/–ஐ விட குறைவாகவும் உள்ளது. மேற்கண்ட இனத்தினை துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளும் பட்சத்தில் மூன்று பணியாளர்களுக்கு உத்தேசமாக 3 x 30000/– (ஒரு மாதத்திற்கு) ரூ.90,000/– ஒரு வருடத்திற்கு 12 X 90,000/– = ரூ.10,80,000/– ஆகும். மேலும் மின் கட்டணம் மற்றும் ரசீது அச்சடிப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.70,000/– ஆக மொத்தம் ரூ.11,50,000/– ஆகும்.<br>எனவே, மேலும் மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் உயர்ந்தபட்ச தொகை கோருவதற்கு வாய்ப்பில்லாத காரணத்தாலும், தற்போது வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ரெங்கராஜ் என்பவர் கோரியுள்ள தொகை ரூ.4,00,500/–ஐ அங்கீகரிக்கலாம்.</td></tr>
<tr><td>1</td><td>கே.குமார்<br>த/பெ, கிருஷ்ணன்<br>4/3, மேட்டுத் தெரு,<br>உறையூர், திருச்சி</td><td rowspan="2">மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில் லை.</td><td>3,65,300</td></tr>
<tr><td>2020 – 2021</td><td>540750</td><td>2</td><td>பி.ரவிச்சந்திரன்<br>த/பெ, பெரியண்ணன்<br>27, ராமலிங்க நகர் மேற்கு விஸ்தரிப்பு,<br>உறையூர், திருச்சி</td><td>3,28,500</td></tr>
<tr><td rowspan="2">2021 – 2022</td><td rowspan="2">குத்தகை ரூ.310250<br>துறை வசூல் ரூ. 22755<br><br>மொத்தம்<br>**ரூ.333005**</td><td colspan="4">13/04/2022 ல் கலந்து கொண்டவர்களின் விபரம்</td></tr>
<tr><td>1</td><td>ரெங்கராஜ்<br>த/பெ,<br>பாலக்கரை,<br>திருச்சி</td><td>மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில் லை.</td><td>4,00500</td></tr>
</table>

| வ. எண். | வருடம் | தொகை ரூ. | மூன்றாண்டு சராசரித் தொகை ரூ | பெயர் மற்றும் முகவரி | | ஏல கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | 6 | 7 | 8 |
| | **குத்தகை இனம் எண். 5 – "5 (1),5(2),5(3) மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு , மேற்கு மற்றும் நடுப்பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்."** | | | | | | | |
| 2 | 2019 – 2020 | 12635000 | 13277279 | **24/03/2022ல் கலந்து கொண்டவர்களின் விபரம் (கிழக்குபகுதி)** | | | | இனம் (5(1))க்கு 24.03.2022ம் தேதியன்று நடந்த பொது ஏலத்தில் திரு.டி.ராஜா, த/பெ, தெய்வம் என்பவர் கலந்து கொண்டு தனக்கு ஏலம் கேட்க விரும்பவில்லை என தெரிவித்துள்ளார். ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே இந்த இனத்தை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என அறிவிக்கப்பட்டது. இனம் (5(1))க்கு 31.03.2022ம் தேதியன்று நடந்த மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. திரு.ஜே.முகமது ஜக்கிரியா த/பெ,எம். ஜெய்லானி என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ரூ.30,00,000/– குறிப்பிடப்பட்டுள்ளார். ஒப்புந்தப்புள்ளித் தொகை குறைவாக உள்ளதால் இந்த இனத்தை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | | | 1 | டி.ராஜா<br>த/பெ,தெய்வம் 5/2, அங்காள ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு, பில்லம நாயக்கன் பட்டி, பெரியகோட்டை, திண்டுக்கல் | ஏலம் கேட்க விரும்பவில்லை என தெரிவித்துள்ளார். | ஒப்பந்தப் புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. | |
| | | | | **31/03/2022ல் கலந்து கொண்டவர்களின் விபரம் (கிழக்குபகுதி)** | | | | |
| | 2020 – 2021 | 13266750 | | 1 | ஜே.முகமது ஜக்கிரியா த/பெ,எம். ஜெய்லானி 9, பாக்கு பேட்டை, உறையூர், திருச்சி 03 | மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. | 30,00,000/ | |
| | 2021 – 2022 | 13930087 | | **24/03/2022ல் கலந்து கொண்டவர்களின் விபரம் (மேற்குபகுதி)** | | | | இனம் (5(2))க்கு 24.03.2022ம் தேதியன்று நடந்த பொது ஏலத்தில் திரு.டி.ராஜா, த/பெ, தெய்வம் என்பவர் கலந்து கொண்டு தனக்கு ஏலம் கேட்க விரும்பவில்லை என தெரிவித்துள்ளார். ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே இந்த இனத்தை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என அறிவிக்கப்பட்டது. இனம் (5(2))க்கு 31.03.2022ம் தேதியன்று நடந்த மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. திரு.ஜே.முகமது ஜக்கிரியா த/பெ,எம். ஜெய்லானி என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு ரூ.30,00,000/– குறிப்பிடப்பட்டுள்ளார். ஒப்புந்தப்புள்ளித் தொகை குறைவாக உள்ளதால் இந்த இனத்தை மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | | | 1 | டி.ராஜா த/பெ,தெய்வம் 5/2, அங்காள ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு, பில்லம நாயக்கன் பட்டி, பெரியகோட்டை, திண்டுக்கல் | ஏலம் கேட்க விரும்பவில்லை என தெரிவித்துள்ளார். | ஒப்பந்தப் புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. | |
| | | | | 2 | எஸ்.கலிபுல்லா த/பெ, ஷேக் அப்துல் காதர், 101, ஈதுகா பள்ளிவாசல் தெரு, நாராயணம்பிள்ளை தோட்டம், திண்டுக்கல். | | | |
| | | | | **31/03/2022ல் கலந்து கொண்டவர்களின் விபரம் (மேற்குபகுதி)** | | | | |
| | | | | 1 | ஜே.முகமது ஜக்கிரியா த/பெ,எம். ஜெய்லானி 9, பாக்கு பேட்டை, உறையூர், திருச்சி 03 | மறு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. | 30,00,000/ | |

| வ. எண். | வருடம் | தொகை ரூ. | மூன்றாண்டு சராசரித் தொகை ரூ | பெயர் மற்றும் முகவரி | ஏல கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | **குத்தகை இனம் எண். 5 – "5 (1),5(2),5(3) மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு, மேற்கு மற்றும் நடுப்பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்."** | | | | | | |
| 2 | | | 13277279 | **24/03/2022ல் கலந்து கொண்டவர்களின் விபரம் (நடுப்பகுதி)** | | | இனம் (5(3)),ல் பொது ஏலத்தில் மூவர் கலந்து கொண்டனர், அதில் திரு.டி.ராஜா, த/பெ, தெய்வம் என்பவர் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச தொகையாக ரூ.69,50,000/- கோரியுள்ளார். ஒப்பந்தப்புள்ளி கோரும் போது திரு.டி.ராஜா, த/பெ, தெய்வம் என்பவர் ரூ.63,62,000/- கோரப்பட்டது.<br>இந்நிலையில் மத்திய பேருந்து நிலையம், கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பிடங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. ஏலத்தில் கலந்து கொண்ட இருவர் ஏலக் கேள்விகள் ஏதும் கேட்கவில்லை.<br>இந்த மூன்று இனங்களும் ஒருங்கிணைந்து ஒரே இனமாக 2019-2020 ஆண்டில் ரூ.1,26,34,998/- ஏலம் விடப்பட்டுள்ளது.<br>நடுப்பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்தின் இடத்தின் அமைவிடம் காரணமாக சாதாரணமாக 24 மணி நேரமும் பேருந்துகள் இயக்கப்படுவதால் பொதுமக்களின் நடமாட்டம் மற்றும் கழிப்பிட பயன்பாடு அதிக அளவில் உள்ளது.<br>மாறாக கிழக்கு பகுதியில் அமைந்துள்ள கழிப்பிட சென்னை, பெங்களூர் செல்லும் பேருந்துகள் நிற்குமிடத்தின் அருகாமையில் இருப்பதால் முன் இரவில் மட்டும் பயன்பாடு உடையதாகும், பிற நேரங்களில் பயன்பாடு குறைவாகவும் உள்ளது.<br>இதே போன்றே மேற்கு பகுதியில், கோவை, திருப்பூர் உள்ளிட்ட ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள் மட்டுமே நிறுத்தப்படுவதால் இங்கும் கழிப்பறைகள் பயன்பாடு குறைவாகவே உள்ளது.<br>ஏலதாரர்களிடமிருந்து கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பிடங்களுக்கான ஏலம் கேட்பதற்கு ஆர்வம் மிக குறைவாக இருப்பதால், ஏலத் தொகை குறைவாகவே அமைய வாய்ப்பு இருக்கிறது. இதன் மூலம் முந்தைய ஏலமதிப்பான ரூ.1,39,30,086/- காட்டிலும் குறைவான தொகையையே வருவாய் ஈட்ட இயலும் என்பதாலும், இவ்வினங்களுள் குறிப்பாக கிழக்கு பகுதியில் உள்ள கழிப்பிடம் ஏலம் கோரப்படாமலேயே இருப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதாலும், இவ்வினங்களை மறு ஏலம் ஒரு முறை நடத்தி, அதில் கோரப்படும் ஏலத் தொகைகளின் அடிப்படையில் இந்த மூன்று கழிப்பறைகளையும் ஒரே இனமாக ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி மேற்கண்ட நடுப்பகுதி கழிப்பறை முடிவு செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. |
| | 2019 – 2020 | 12635000 | | 1. டி.ராஜா த/பெ,தெய்வம் 5/2, அங்காள ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு, பில்லம நாயக்கன் பட்டி, பெரியகோட்டை, திண்டுக்கல் | 69,50,000 | -- | |
| | 2020 – 2021 | 13266750 | | 2. எஸ்.கலிபுல்லா த/பெ, ஷேக் அப்துல் காதர், 101, ஈதுகா பள்ளிவாசல் தெருநாராயணம் பிள்ளை தோட்டம், திண்டுக்கல். | 69,01,000 | -- | |
| | 2021 – 2022 | 13930087 | | 3. ஏ.ஷாஜஹான் த/பெ,அப்துல் மஜீத் 28, தெரசம்மாள் தெரு, சங்கிலியாண்டபுரம், திருச்சி –1 | ஏலம் கேட்க விரும்பவில்லை என தெரிவித்துள்ளார். | | |
| | | | | 4. எஸ்.ஜெயந்தி த/பெ.வி.சீனிவாசன் 34பி, வடக்கு கல்லுக்காரத் தெரு, எடத்தெரு, பாலக்கரை, திருச்சி | -- | 50,10,099 | |
| | | | | 5. எஸ்.திருவேங்கடம் த/பெ.இ.டி.சீனி வாசன் 115, கீழபடையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி | -- | 55,22,222 | |
| | | | | 6. டி.ராஜா த/பெ,தெய்வம் 5/2, அங்காள ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு, பில்லம நாயக்கன் பட்டி, பெரியகோட்டை, திண்டுக்கல் | -- | 63,62,000 | |

| வ. எண். | வருடம் | தொகை ரூ. | மூன்றாண்டு சராசரித் தொகை ரூ | பெயர் மற்றும் முகவரி | | ஏல கேள்வித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | | 6 | 7 | 8 |
| | **குத்தகை இனம் எண். 5 – "5 (1),5(2),5(3) மத்திய பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு , மேற்கு மற்றும் நடுப்பகுதியில் உள்ள கட்டண கழிப்பிடங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்."** | | | | | | | |
| | | | | 13/04/2022ல் கலந்து கொண்டவர்களின் விபரம் | | | | |
| 2 | 2019 – 2020 | 12635000 | 13277279 | 1 | ஜெ.பிலால் த/பெ. ஜெய்லானி, உறையூர், திருச்சி | -- | 1,55,00,531 | 31.03.2022 அன்று மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.முகம்மது ஜக்கிரியா என்பவர் கிழக்கு பகுதியில் உள்ள கழிப்பிடத்திற்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ரூ.30,00,000/– எனக்குறிப்பிட்டுள்ளார். மேலும், மேற்கு பகுதியில் உள்ள கழிப்பிடத்திற்கு திரு.முகம்மது ஜக்கிரியா என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி ரூ–30,00,000/– என குறிப்பிட்டுள்ளார்.<br>மேற்கண்ட நடுப்பகுதியில் கழிப்பிடம் உயர்ந்தபட்ச கேள்வித் தொகை ரூ.69,50,000/– மற்றும், மேலும் கிழக்கு பகுதி கழிப்பிடத்திற்கு உயர்ந்தபட்ச தொகையாக ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.30,00,000/– மற்றும் மேற்கு பகுதி கழிப்பிடத்திற்கு உயர்ந்தபட்ச தொகையாக ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.30,00,000/– ஆக மொத்தம் ரூ.1,29,50,000/– மட்டும் மாநகராட்சிக்கு வருவாய் பெற வழிவகை உள்ளது.<br>மேலும் 2019–2022 ஐ விட 2022–2025 கட்டண வசூல் கூடுதலாக கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது<br>**2019–2022 2022–2025**<br>சிறுநீர் கழிக்க ரூ.2.00 – ரூ.3.00<br>மலம் கழிக்க ரூ.3.00 – ரூ.5.00<br>குளியலறை கட்டணம் ரூ. 10.00<br>எனவே, இதனையும் கருத்தில் கொண்டு ஏற்கனவே தெரிவித்துள்ள 24.03.2022ந் தேதிய அலுவலகக் குறிப்பின்படி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள கிழக்கு, மேற்கு மற்றும் நடுப்பகுதியில் உள்ள கழிப்பிடங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒன்றாக ஒரே இனமாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.<br>எனவே மூன்று இனங்களையும் ஒரே இனமாக சேர்த்து ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதை அனுமதிக்கலாம்.<br>இனம் எண். 5(1), 5 (2), மற்றும் 5 (3) ஆகிய மூன்று இனங்களுக்கும் தனித்தனியே இரண்டு முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒப்பந்தப்புள்ளி அல்லது ஒருவர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டு குறைவான தொகை கோரியும் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோர விரும்பாமலும் உள்ளதால் சென்ற ஆண்டு குத்தகை தொகையினை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையினை விடவும் குறைவாகவும் குறிப்பிடுவதால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதினை தவிர்க்கும் பொருட்டு மூன்று கழிப்பறைகளையும் சேர்த்து ஒரே இனமாக மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என அறிவிக்கப்பட்டது.<br>மேற்கண்டவாறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் சென்ற ஆண்டு குத்தகைத் தொகை ரூ. 1,32,77,279/–ஐ விடவும் சராசரித் தொகையினை விடவும் குறைவாக இருந்ததாலும், துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு மீண்டும் மூன்று கழிப்பிடங்களையும் (இனம் எண். 5(1) ,5(2),5(3)) சேர்த்து ஒரே இனமாக 13.04.2022 அன்று மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.<br>ஒப்பந்தப்புள்ளியில் மூவர் கலந்து கொண்டனர். வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளித் தொகையாக திரு.பிலால், த/பெ, ஜெய்லானி என்பவர் ரூ.1,55,00,531/– என குறிபிட்டிருப்பது சென்ற ஆண்டு குத்தகைத் தொகையினை விட ரூ.15,70,444 /– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையினை விட ரூ.22,23,252/– கூடுதலாக உள்ளதாலும் திரு.பிலால், த/பெ.ஜெய்லானி, திருச்சி என்பவர் கோரியுள்ள தொகையினை அங்கீகரிக்கலாம். |
| | 2020 – 2021 | 13266750 | | | | | | |
| | 2021 – 2022 | 13930087 | | 2 | டி.ராஜா த/பெ.தெய்வம் 5/2, அங்காள ஈஸ்வரி அம்மன் கோவில் தெரு, பில்லம நாயக்கன் பட்டி, பெரியகோட்டை, திண்டுக்கல் | -- | 1,25,00,000 | |
| | | | | 3 | ஜே.முகமது ஜக்கிரியா த/பெ.எம். ஜெய்லானி 9, பாக்கு பேட்டை, உறையூர், திருச்சி 03 | -- | 1,49,00,531 | |

வானத்தின் மழைத்துளி
வையத்தின் உயிர்துளி

மேற்கண்ட பட்டியலில் காணும் 2022–2025 மூன்றாண்டுகால குத்தகை உரிம 02 இனங்களுக்கும் வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகைகளை ஏற்று ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார். இதன் பேரில் கலம் 8ல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

அ) மேற்கண்ட பட்டியலில் 2022–2025 மூன்றாண்டுகால குத்தகை உரிம 02 இனங்களுக்கும் வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையானது கடந்த ஆண்டு உரிமத் தொகையைவிட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையைவிட கூடுதலாகவும் உள்ளதாலும், (கலம் 8ல் கண்டவாறு) இதற்கு மேல் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரினாலும் மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு மேல் ஏலம் போக வாய்ப்பில்லை என்பதால் வருவாய் இழப்பினை தவிர்க்கும் வகையில் வரப்பெற்ற உயர்ந்தபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

ஆ) மேலும் அரசாணை (நிலை) எண். 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள். 25.05.2009ன் படியும், மாமன்ற தீர்மானம் எண்.720, நாள்.31.12.2021ன் வரிசை எண்.9ல் தெரிவித்துள்ளபடி, 2023–2024 இரண்டாம் ஆண்டிற்கு முதலாம் ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வும், 2024–2025 மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வுடன் கூடிய குத்தகை தொகை வசூல் செய்யவும் அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண். அ1/2479/2022 (பொன்)**

## தீர்மானம் எண்: 30 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்க ம் கோட்டத்திற்குட்பட்ட 2022–2025 மூன்றாண்டுகால குத்தகை உரிம 13 இனங்களுக்கு 31.03.2022 ந் தேதியன்று மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 04 இனங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. அதன் விவரம் பின்வருமாறு.

| இனம் எண் | குத்தகை இனம் விபரம் | வருடம் | தொகை ரூ | மூன்றாண்டு சராசரித் தொகை . (ரூ) | வ.எண் | பெயர் மற்றும் முகவரி | ஏல கேள்வித் தொகை (ரூ) | ஒப்பந்தப் புள்ளி தொகை (ரூ) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | பலப்பட்டறை இனத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2019 – 2020 | 1093261 | 1139320 | 1 | கே.வீரமணி 22, ஜெ, பிளாக், 2வது தளம், ஜெ.ஜெ.நகர், ஸ்ரீரங்கம், திருச்சி | – | 1441750 | மேற்படி இனத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி 2021–2022 ஆம் ஆண்டை விட ரூ.251050/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையை விட ரூ.302430/–கூடுதலாகவும் உள்ளது. இதற்கு மேல் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரினால் மேற்படி தொகைக்கு மேல் ஏலம் போக வாய்ப்பில்லை. எனவே, உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளித் தொகை கொடுத்துள்ள திரு. கே.வீரமணி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை ஏற்கலாம். |
| | | 2020–2021 | 1134000 | | | | | | |
| | | 2021–2022 | 1190700 | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | மாம்பழச் சாலையில் மாம்பழம் விற்பனைக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2019 - 2020 | 43000 | 45186 | – | – | - | - | 1. மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 31.03.2022 ல் குத்தகை முடிவடைவதை கருத்தில் கொண்டும், பணியாளர்களின் ஊதியம், ரசீது புத்தகம் அச்சடித்தல் ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு, மாநகராட்சி துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளாமல் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரருக்கே 5 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ.12376/– தொகையினை வசூல் செய்து கொண்டு ஒப்படைப்பு செய்யலாம். 2. மீண்டும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | 2020 - 2021 | 45150 | | – | – | - | - | |
| | | 2021 - 2022 | 47408 | | – | – | - | - | |
| 3 | அம்மா மண்டபம் ரோடு கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2019 - 2020 | 811100 | 852263 | – | – | - | - | 1 மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 31.03.2022 ல் குத்தகை முடிவடைவதை கருத்தில் கொண்டும், பணியாளர்களின் ஊதியம்,ரசீது புத்தகம் அச்சடித்தல் ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு, மாநகராட்சி துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளாமல் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரர்க்கே 5 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ.114205/– தொகையினை வசூல் செய்து கொண்டு ஒப்படைப்பு செய்யலாம். 2. மீண்டும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | அம்மா மண்டபம் ரோடு, நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் அருகிலுள்ள கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | 2019 – 2020 | 115998 | 121895 | – | – | - | - | 1 மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை 31.03.2022 ல் குத்தகை முடிவடைவதை கருத்தில் கொண்டும் பணியாளர்களின் ஊதியம், ரசீது புத்தகம் அச்சடித்தல் ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு, மாநகராட்சி துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளாமல் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரருக்கே 5 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ.33488/– தொகையினை வசூல் செய்து கொண்டு ஒப்படைப்பு செய்யலாம். 2. மீண்டும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | 2020-2021 | 121798 | | | | | | |
| | | 2021-2022 | 127888 | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | திருவானைக்கோவில் சன்னதி வீதியிலுள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2019 – 2020 | 249235 | 270346 | | திரு. கே.வினோத் குமார், 139/181, காமராஜ் நகர், வடக்கு தாராநல்லூர், திருச்சி | 0 | 303333 | மேற்படி இனத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப் பெற்ற ஒப்பந் தப்புள்ளி 2021–2022 ஆம் ஆண்டை விட ரூ.15580/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையை விட ரூ.32987/– கூடுதலாகவும் உள்ளது . இதற்கு மேல் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரினால் மேற்படி தொகைக்கு மேல் ஏலம் போகவாய்ப்பில்லை. எனவே, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை கொடுத்துள்ள.திரு.கே. வினோத்குமார், என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை ஏற்கலாம். |
| | | 2020 – 2021 | 274050 | | | | | | |
| | | 2021 - 2022 | 287753 | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | கள்ளத்தெரு, திரவியம் பிள்ளை பூங்காவில் கட்டப்பட்டுள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 2019 - 2020 | 226053 | 248269 | 1 | திரு. வி.பிரபாகரன் த/பெ.கே.வீரமணி, 1/101, பாரத் நகர், திருவளர்ச்சோலை,போஸ்ட், திருவானைக் கோவில், திருச்சி–5 | 0 | 310250 | மேற்படி இனத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. மூன்று ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி 2021–2022 ஆம் ஆண்டை விட ரூ .44547/– கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகையை விட ரூ.61981/–கூடுதலாகவும் உள்ளது. இதற்கு மேல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரினால் மேற்படி தொகைக்கு மேல் ஏலம் போக வாய்ப்பில்லை . எனவே, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை கொடுத்துள்ள, திரு.வி.பிரபாகரன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை ஏற்கலாம். |
| | | 2020 - 2021 | 253050 | | 2 | திரு.ஆர். ராஜ்கிரன் 7/195, சத்தியமூர்த்தி நகர், இ.பி ரோடு, திருச்சி–8 | 0 | 300000 | |
| | | 2021 - 2022 | 265703 | | 3 | எம்.சத்தியநாராயணன் 115, அம்மாமண்டபம் ரோடு,ஸ்ரீரங்கம், திருச்சி–6 | 0 | 286890 | |
| 7 | பூசாரி தெரு சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2019 - 2020 | 865200 | 909181 | – | – | - | - | 1. மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை. சிந்தாமணி மற்றும் பூசாரி தெரு சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் இனத்திற்கு கடந்த 2019–2020 ஆம் ஆண்டுக்கு ரூ .865200/– க்கு குத்தகை இனம் திரு .வி.சீனிவாசன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில் சிந்தாமணி காளியம்மன் கோவில் தெருவில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் தினசரி சந்தை மற்றும் இருச க்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தத்துடன் கூடிய வணிக வளாகம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு , சிந்தாமணி சந்தை மற்றும் 18 கடைகள் இடிக்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது . மேற்படி சந்தையில் 70 கடைகளுக்கும், கடை ஒன்றுக்கு ரூ .20/– வீதம் மொத்தம் ரூ.1400/– குத்தகை தாரரால் வசூல் செய்யப்பட்டு வந்தது . இது வருடத்திற்கு ரூ .511000/– ஆகும். 2020–2021 ஆம் ஆண்டிற்கு திரு.வி.சீனிவாசன் என்பவர் ரூ.908460/–செலுத்தப்பட வேண்டும் . ஆனால் சிந்தாமணி சந்தை இடிக்கப்பட்டு விட்டதால் அதற்கான தொகை ரூ .511000/– ஐ கழித்துக் கொண்டு மீதம் உள்ள தொகை ரூ.397460/– செலுத்தப்பட்டது. மேலும் 2021–2022 ஆம் ஆண்டிற்கு 5 சதவீதம் உயர்வு செய்து ரூ.417333/–செலுத்தப்பட்டது. பணியாளர்களின் ஊதியம் ரசீது புத்தகம் அச்சடித்தல் ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு , மாநகராட்சிதுறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளாமல் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரருக்கே 5 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ .109200/– தொகையினை வசூல் செய்து கொண்டு ஒப்படைப்பு செய்யலாம் . 2. மீண்டும் மறு ஏலம் /ஒப்பந்தப் புள்ளி கோரலாம். |
| | | 2020 - 2021 | 908460 | | – | – | - | - | |
| | | 2021 - 2022 | 417333 | | – | – | - | - | |

வானத்தின் மழைத்துளி
வையத்தின் உயிர்துளி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | அம்மா மண்டபம் படித்துறையில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | 2019 - 2020 | 1660000 | 1744383 | – | – | - | - | 1.மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை. 31.03.2022 ல் குத்தகை முடிவடைவதை கருத்தில் கொண்டும் பணியாளர்களின் ஊதியம் ,ரசீது புத்தகம் அச்சடித்தல் ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு, மாநகராட்சி துறை மூலம் வசூ ல் பணி மேற்கொள்ளாமல் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரருக்கே 5 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ.270270/– தொகையினை வசூல் செய்து கொண்டு ஒப்படைப்பு செய்யலாம் . 2. மீண்டும் மனு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | 2020 - 2021 | 1743000 | | – | – | - | - | |
| | | 2021 - 2022 | 1032585 | | – | – | - | - | |
| 10 | டவுன் ஹால் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | 2019 - 2020 | 900000 | 945750 | – | – | - | - | 1. மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 31.03.2022 ல் குத்தகை முடிவடைவதை கருத்தில் கொண்டும் பணியாளர்களின் ஊதியம் ரசீது புத்தகம் அச்சடித்தல் ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு, மாநகராட்சி துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளாமல் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரருக்கே 5 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ.154700/– தொகையினை வசூல் செய்து கொண்டு ஒப்படைப்பு செய்யலாம். 2. மீண்டும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | 2020 - 2021 | 945000 | | – | – | - | - | |
| | | 2021 - 2022 | 591000 | | – | – | - | - | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | சத்திரம் பேருந்து நிலையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தின்தெற்கு பக்கம் உள்ள பெண்கள் கழிப்பிடம் மற்றும் வடக்கு பக்கம் உள்ள ஆண்கள் கழிப்பிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | 2019 - 2020 | 0 | 0 | 1 | எம்.சத்தியநாராயணன் 115, அம்மாமண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம்,திருச்சி–6 | 0 | 515555 | மேற்படி இனத்திற்கு ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி இனம் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கு மேல் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரினால் மேற்படி தொகைக்கு மேல் ஏலம் போக வாய்ப்பில்லை. எனவே, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை கொடுத்துள்ள,திரு.கே.வினோத்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகையை ஏற்கலாம். |
| | | 2020 - 2021 | 0 | | | | | | |
| | | 2021 - 2022 | 0 | | | | | | |
| 13 | வடக்கு தேவித் தெரு தினசரி பூ சந்தை – மொத்த கடைகள் 68– நாளொன்றுக்கு தினசரி கட்டணம் ரூ.40/–வசூல் செய்யும் உரிமம் | 2019 - 2020 | 897166 | 515509 | – | – | - | - | 1. மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை . மேற்படி இனம் துறை மூலம் தற்போது வசூல் செய்யப்பட்டு வருவதால் தொடர்ந்து துறை வசூல் மேற்கொள்ளலாம்.<br><br>2. மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | 2020 - 2021 | 549960 | | – | – | - | - | |
| | | 2021 - 2022 | 99400 | | – | – | - | - | |
| 14 | இ) மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம். | 2019 - 2020 | 5947 | 6273 | – | – | - | - | 1.மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 31.03.2022 ல் குத்தகை முடிவடைவதை கருத்தில் கொண்டும் பணியாளர்களின் ஊதியம், ரசீது புத்தகம் அச்சடித்தல் ஏற்படும் செலவினத்தை கருத்தில் கொண்டு, மாநகராட்சி துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளாமல் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வகையில் 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரருக்கே 5 சதவீதம் உயர்வு செய்து 01.04.2022 முதல் 30.06.2022 வரை ரூ.1729/– தொகையினை வசூல் செய்து கொண்டு ஒப்படைப்பு செய்யலாம். 2. மீண்டும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | 2020 - 2021 | 6279 | | – | – | - | - | |
| | | 2021 - 2022 | 6593 | | – | – | - | - | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | ஸ்ரீரங்கத்திற்கு வந்து செல்லும் உள்ளூர் தனியார் நகரப்பேருந்துகள்/நகர சிற்றுந்துகளுக்கு கட்டண வசூல் செய்திடவும் மற்றும் சுற்றுலா பேருந்துகள்/வேன்களுக்கு நிறுத்தக்கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் (2018–2019=4961250) | 2019 - 2020 | 5209313 | 5474119 | – | – | - | - | மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள வில்லை. எனவே, மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரலாம். |
| | | 2020 - 2021 | 5469778 | | – | – | - | - | |
| | | 2021 - 2022 | 5743267 | | – | – | - | - | |

<u>அலுவலக குறிப்பு</u>

**அ.** மேற்கண்ட பட்டியலில் காணும் 13 இனங்களில் கலம் 10 ல் குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் இனம் எண் 1,5,6 மற்றும் 12 ஆகிய 04 இனங்களுக்கு வரப்பெற்ற உயர்ந்தப்பட்ச தொகையினை ஏற்க அனுமதிக்கலாம்.

**ஆ.** மீதம் உள்ள இனம் எண் 2,3,4,7,9,10,13,14 மற்றும் 15 ஆகிய 9 இனங்களில் வரிசை எண்–15 தவிர மற்ற இனங்களுக்கு கலம் எண் –10 ல் தெரிவிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் 01.04.2022 முதல் 30.06.2022 வரை 2021–2022 ஆம் ஆண்டு குத்தகைதாரர்களுக்கு மேற்படி இனத்தை ஒப்படைப்பு செய்ய அனுமதிக்கலாம்.

**இ.** 31.03.2022 ல் இனம் முடிவடைவதால் , 01.04.2022 முதல் ஒப்படைப்பு செய்ய வேண்டியுள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி இனத்தை குத்தகைதாரருக்கு ஒப்படைப்பு செய்தற்கு பின்னேற்பு வழங்க அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்–அ1/ 1253 /2022/ஸ்ரீ**

**தீர்மானம் எண்: 31 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

<u>**பொருள்: 6**</u>

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–22 அறிவிப்பு எண்.16ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, 30.12.2021ம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அரசாணை (டி) எண்.**497** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**28.12.2021**ல் பஞ்சப்பூரில் பின்வரும் திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கு முதற்கட்ட அனுமதி அளிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டப்பணிகளின் விபரம் | பரப்பளவு | மதிப்பீடுத் தொகை |
|---|---|---|---|
| 1) | ஒருங்கிணைந்த பேருந்து முனையம் (Integrated Bus Terminal) | 48.0 ஏக்கர் | ரூ.159.00 கோடி |
| 2) | கனரக சரக்கு வாகன முனையம் (Truck Terminal) | 25.0 ஏக்கர் | ரூ. 65.90 கோடி |
| 3) | சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள். (Roads, Storm Water Drain and other Infrastructure facilities) | 152.0 ஏக்கர் | ரூ.40.30 கோடி |
| 4) | பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் (Multi utility facilities centre) | 100.0 ஏக்கர் | ரூ.84.78 கோடி |
| | **மொத்தம்** | **325.0 ஏக்கர்** | **ரூ.349.98 கோடி** |

மேற்கண்ட நான்கு திட்டப் பணிகளுக்கு ரூ.350.00 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (டி) எண்.497 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.12.2021ல், ரூ.140.00 கோடி அரசின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதர தொடர்புடைய திட்டப்பணிகளை ரூ.210.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 2022-2023ம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையில் மாநகராட்சி பொதுநிதியில் ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.159.98 கோடி, கட்டுமான பணிக்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய வட்டித் தொகை (IDC) ரூ.6.71 கோடி, எதிர்காலத்தில் கட்டுமான மூலப்பொருட்களின் விலை உயர்வுக்கான ஒதுக்கீடு ரூ.19.35 கோடி மற்றும் கடன் தொகை பெறுவதற்கான செயலாக்க கட்டணத் தொகை ரூ.1.75 கோடி என ஆக மொத்தம் ரூ.187.79 கோடியை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் லிமிடெட் ., சென்னை (TUFIDCO) நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று பணிகளை மேற்கொள்வதற்கும், அரசால் நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் கடன் தொகையினை திரும்ப செலுத்துவதற்கும் மற்றும் திரும்ப செலுத்தப்படும் கடன் தொகையினை திட்ட செயலாக்க காலத்தில் இரண்டாண்டு (Moratorium Period) காலம் தாழ்த்தி செலுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் இதர திட்டப்பணிகளை மேற்கண்டவாறு அரசின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இதர திட்டப்பணிகளை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் லிமிடெட்., சென்னை (TUFIDCO) நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றும், இக்கடனுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் திரும்ப செலுத்துவதற்கும், கடன் தொகையினை திட்ட செயலாக்க காலத்தில் இரண்டாண்டு (Moratorium Period) காலம் தாழ்த்தி செலுத்துவதற்கும், இப்பணியினை மேற்கொள்வதற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக தமிழக அரசுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கும்,

மேலும் இக்கடன் பெறுவதற்கான நிபந்தனைகளை ஏற்பதற்கும், நிதி நிறுவனங்களிடம் உரிய ஒப்பந்தங்கள் மேற்கொள்வதற்கும் ஆணையருக்கு அதிகாரம் வழங்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் இதரத் திட்டப் பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.350.00 கோடியில், ரூ.140.00 கோடி அரசின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து பணியினை மேற்கொள்வதற்கும், இதர தொடர்புடைய திட்டப்பணிகளை ரூ.210.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 2022-2023ம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கையில் மாநகராட்சி பொதுநிதி ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்வதற்கும், மீதமுள்ள திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.158.98 கோடி, கட்டுமான பணிக்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய வட்டித் தொகை (IDC) ரூ.6.71 கோடி, எதிர்காலத்தில்

2. கட்டுமான மூலப்பொருட்களின் விலை உயர்வுக்கான ஒதுக்கீடு ரூ.19.35 கோடி மற்றும் கடன் தொகை பெறுவதற்கான செயலாக்க கட்டணத் தொகை ரூ.1.75 கோடி என ஆக மொத்தம் ரூ.187.81 கோடியை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் லிமிடெட் ., சென்னை (TUFIDCO) நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றும், இக்கடனுக்கு அரசால் நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் திரும்ப செலுத்துவதற்கும், கடன் தொகையினை திட்ட செயலாக்க காலத்தில் இரண்டாண்டு (Moratorium Period) காலம் தாழ்த்தி செலுத்துவதற்கும், இப்பணியினை மேற்கொள்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக தமிழக அரசுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட திட்டப்பணிகளை செயல்படுத்துவதற்கு கடன் பெறுவதற்கான நிபந்தனைகளை ஏற்பதற்கும், நிதி நிறுவனங்களிடம் உரிய ஒப்பந்தங்கள் மேற்கொள்வதற்கும் ஆணையருக்கு அதிகாரம் வழங்கிட அனுமதி அளிக்கலாம்.

**இ1/4343/2021(மையம்)**

**தீர்மானம் எண்: 32 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , சிறப்பு சாலைகள் திட்டம் 2015–16(SRP)ன் கீழ் , கீழ்கண்ட பணியை திரு .டி.தேவராசன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது . இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திருப்ப வழங்க கோரியுள்ளார் . கீழ்கண்டுள்ள பணியி னை மேற்கொண்டமைக்கு **தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை**

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை 5% (ரூபாயில்) | வழங்கப்பட்ட தொகை 5% (ரூபாயில்) | வழங்கப்பட வேண்டிய தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | | |
| | | | | | | | தொகுப்பு | ப. எண் | வ. எண் |
| 1 | வார்டு எண்.40க்குப்பட்ட அசோக் நகர் மேற்கு விஸ்தரிப்பு தெருக்கள் , வார்டு எண் .41க்குட்பட்ட சக்தி விநாயகர் கோவில் தெரு , வார்டு எண்.45க்குட்பட்ட காந்தி தெரு வார்டு எண்.45க்குட்பட்ட ஆரோக்கிய மாதா அவென்யூ (வசந்த நகர் 8வது குறுக்கு தெரு முதல் திருவள்ளுவர் தெரு டவர் வரை ) மைய சுடுகலவை இயந்திரம் உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தார்சாலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல், வார்டு எண் .49க்குட்பட்ட அன்னை சத்யா நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கீரீட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் , வார்டு எண்.50க்குட்பட்ட பாரதியார் தெரு மற்றும் கம்பர் தெருவில் மைய சுடுகலவை இயந்திரம் உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தார்சாலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் , வார்டு எண் .51க்குட்பட்ட சவேரியார் கோவில் தெரு, பிஷப்குளம் குறுக்கு தெரு மற்றும் மூலக்கொல்லை தெரு பகுதிகளில் சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல், வார்டு எண்.52க்குட்பட்ட ஸ்ரீனிவாச நகர் 2,3,4வது மெயின் சாலை மற்றும் குறுக்கு தெரு மற்றும் 5வது மெயின் சாலை மற்றும் குறுக்கு தெருக்கள் , வார்டு எண் .53க்குட்பட்ட ரெங்க நகர் மெயின் ரோடு மற்றும் 5வது குறுக்கு தெரு, வார்டு எண்.54க்குட்பட்ட இராமலிங்க நகர் 2வது மெயின் ரோடு மற்றும் ராஜாரத்தினம் பிள்ளை தெருவில் மைய சுடுகலவை இயந்திரம் உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தா ர்சாலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல் , வார்டு எண்.55க்குட்பட்ட சோமுபிள்ளை தோப்பு பிரதான சாலை மற்றும் குறுக்கு தெரு மற்றும் தேவர் காலனி குறுக்கு தெரு , வார்டு எண்.56க்குட்பட்ட ராம்நகர், சிமெண்ட் கான்கீரிட் தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல், வார்டு எண்.57க்குட்பட்ட ஹவுசிங் யூனிட் ரோடு மற்றும் மலர் சாலை, வார்டு எண்.58க்குட்பட்ட காவேரி நகர் பிரதான சாலை , வார்டு எண்.59க்குட்பட்ட உறையூர் மருத்துவமனை மெயின் ரோடு சி.எஸ்.ஐ திருப்புமுனை முதல் நாச்சியார் கோவில் மெயின் ரோடு வரை , வார்டு எண்.60க்குட்பட்ட காவல்கார தெரு 2வது மெயின் ரோடு மைய சுடுகலவை இயந்திரம் உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் தார்சாலை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளுதல்<br><br>மதிப்பீடு ரூ.500.00 இலட்சம். | திரு.டி. தேவராசன், திருச்சி | 11.02.16 | 824062/- | 824062/- | - | VIII | 59 | 21 |
| | | | 11.02.16 ASD | 500000/- | 500000/- | - | VIII | 59 | 22 |
| | | | 07.03.16 | 668573/- | 668573/- | - | VIII | 68 | 27 |
| | | | 23.06.16 | 467779/- | 467779/- | - | IX | 6 | 57 |
| | | | 19.08.16 | 76739/- | 76739/- | - | IX | 13 | 156 |
| | | | 26.08.16 | 290781/- | 290781/- | - | IX | 21 | 271 |
| | | | 01.11.16 | 122641/- | 122641/- | - | IX | 43 | 564 |
| | | | 27.08.19 | 4268/- | 4268/- | - | II | 72 | 118 |
| | | | EMD DD No,149932 27.10.15 Fedral bank | 5,00,000 | - | 5,00,000 | | | |
| | மொத்தம் | | | 34,54,843 | 29,54,843 | 5,00,000 | | | |

ஒப்பந்ததாரர் திரு.டி.தேவராசன், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ .34,54,843/-ல், ரூ.29,54,843/-ஐ ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட நிலையில் , தற்போது மீதமுள்ள EMD வைப்புத் தொகை ரூ .5,00,000/-ஐ ஒப்பந்ததாரர் அவர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை ரூ.5,00,000/-ஐ காலம் கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposite Account ) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/9631/2015(மையம்)**

**தீர்மானம் எண்: 33 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 8**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021-22 அறிவிப்பு எண்.16ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பஞ்சப்பூரில் புதிதாக ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பஞ்சப்பூரில் 30.12.2021ம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

சென்னை மதுரை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 574 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் 115 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் மட்டும் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விடமானது சென்னை மதுரை தேசிய நெடுஞ்சாலையினை ஒட்டி அமைந்துள்ளதால், ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைத்திட ஏதுவாக இருப்பினும், உயர்வு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலையினை ஒப்பிடும் போது சாலை மட்டத்திலிருந்து 2.40 மீட்டர் தாழ்வாக அமைந்துள்ளது. மேலும் இவ்விடத்தில் பேருந்து நிலையம் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ள பகுதியில் கழிவு நீர் சுத்திகரிக்கும் குட்டைகள் இருந்த பகுதிகளாகும்.

இப்பகுதி சாலை மட்ட அளவிற்கு உயர்த்துதல் அவசியமாகிறது. தேர்வு செய்யப்பட்ட பகுதிகளை சாலை மட்டத்திற்கு ஏற்ப 2.30 மீட்டர் உயர்த்த ரூ.33.12 கோடி உத்தேச செலவினம் ஆகும். இதில் தற்போது கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள உத்தேசித்துள்ள (கட்டிடப்பகுதிகள் நீங்கலாக) 63.26 ஏக்கர் பரப்பளவு பகுதியில் 2.30 மீட்டர் உயர்த்திட உத்தேச செலவினம் ரூ.20.10 கோடி ஆகிறது.

இவ்விடத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம், பல்நோக்கு வணிக மையம், கனரக சரக்கு வாகன முனையம் மற்றும் சாலைகளுக்காக ரூ.350.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு அரசிடம் பெறப்பட உள்ளது.

இந்நிலையில் பல்வேறு திட்டங்களின் கீழ் இம்மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலைப்பணிகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால், உடனடியாக மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இச்சாலைப்பணிகள், மேற்குறிப்பிட்ட பாதாள சாக்கடை, குடிநீர் திட்டப்பணிகள் முடிக்கப்பட்ட பின்னரே மேற்கொள்ள இயலும்.

எனவே இந்த சாலைப் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ள சாலைப் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதன் மூலம் ரூ.20.10 கோடி சேமிப்பாகும்.

| வ. எண். | சாலைப்பணிகள் 2021-2022 | பணிகள் மேற்கொள்ளப்படாதவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. கோடியில். |
| 1. | Incentive Fund | 40 | 12.47 |
| 2. | Development Charges | 41 | 7.12 |
| 3. | General fund | 7 | 0.51 |
| | **மொத்தம்** | **88** | **20.10** |

மேற்கண்டவாறு சேமிப்பாகும் தொகை ரூ.20.10 கோடி மூலம், பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க கிராவல் மண் நிரப்பும் பணிகளை பின்வருமாறு நான்கு தொகுப்புகளாக மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

| வ. எண். | பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. கோடியில் |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைய உள்ள பகுதி -Iல் கிராவல் நிரப்பும் பணி – தொகுப்பு–I | 6.49 |
| 2. | ஒருங்கிணைந்த பேருந்து முனையம் அமைய உள்ள பகுதி –II மற்றும் பல்நோக்கு வணிக மையம் அமைய உள்ள பகுதியில் கிராவல் நிரப்பும் பணி – தொகுப்பு–II | 2.80 |
| 3. | கனரக சரக்கு வாகன முனையம் (Truck Terminal) அமைய உள்ள அமைய உள்ள பகுதியில் கிராவல் நிரப்பும் பணி – தொகுப்பு–III | 6.27 |
| 4. | சாலை, துணைமின் நிலையம் மற்றும் இதரப்பணிகள் அமைய உள்ள பகுதியில் கிராவல் நிரப்பும் பணி – தொகுப்பு–IV | 4.54 |

எனவே பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ள சாலைப்பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதன் மூலம் சேமிப்பாகும் தொகை ரூ.20.10 கோடி மூலம், பஞ்சப்பூரில் கிராவல் நிரப்பும் பணிகளை மேற்கண்டவாறு நான்கு தொகுப்புகளாக மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதியினை பெறுவதற்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கும், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் மேற்கண்ட சாலைப்பணிகளுக்கான நிதியினை அரசிடமிருந்து பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கும், நிதி ஒதுக்கீடு கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கும், மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்டவாறு சாலைப்பணிகள் மேற்கொள்ளப்படாத பணிகளை நிறுத்தி வைப்பதற்கும், இதன் மூலம் சேமிப்பாகும் தொகை மூலம், பஞ்சப்பூரில் கிராவல் மண் நிரப்பும் பணிகளை மேற்கண்டவாறு நான்கு தொகுப்புகளாக மேற்கொள்வதற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. நிறுத்தி வைக்கப்படும் சாலைப்பணிகளுக்கான நிதியினை அரசிடமிருந்து பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**இ1/4343/2022/மை**

**தீர்மானம் எண்: 34 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள பணியினை திரு .ஆர்.ஜேக்கப், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித் தம் செய்யப்பட்ட காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரப்பட்ட ஒப்பந்ததாரரின் கடிதம் உதவி ஆணையர் (கணக்குகள்), திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.பி5/542/2021(மையம்), நாள்.27.01.2022 உடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ, எண். | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண் மற்றும் வரிசை எண். | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொகுப்பு | ப.எண். | வ.எண். |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம், வார்டு எண்.9க்குட்பட்ட அய்யாளம்மன் படித்துறை (கொசமேட்டுத் தெரு) பகுதியில் நுண் உரக்கிடங்கு கட்டும் பணி இ3/8943/2017(மையம்) மதிப்பீடு ரூ.56.60 லட்சம் | 24.01.18 (SD) 4%<br>24.04.2018 (SD) 4%<br>02.08.2018 (SD) 4% | 98375.00<br>108159.00<br>15158.00 | X | 49 | 791 |
| | **மொத்தம்** | **SD** | **221692.00** | | | |

எனவே, அட்டவணையில் கண்டுள்ள இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ .2,21,692/−ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.ஆர்.ஜேக்கப், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.2,21,692/−ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account ) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/ 8943 /2017(மையம்)**

**தீர்மானம் எண்: 35 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 18 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றது . இவற்றிற்கு 20 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் பெரிய மிளகுப்பாறை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ அலுவலர் கடந்த 31.01.2022 முதல் சுய விருப்ப ஓய்வு பெற்று சென்றுவிட்டார். மேலும் மேலகல்கண்டார்கோட்டை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ அலுவலர் மகப்பேறு விடுப்பிலும் , பீரங்கிகுளம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவ அலுவலர் உயர்கல்வி பயில்வதற்கான விடுப்பிலும் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் , திருச்சிராப்பள்ளி அவர்களின் 31.03.2022 ஆம் தேதிய செயல்முறை உத்தரவில் , மேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, ஒரு மருத்துவ அலுவலரை முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமித்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது . எனவே, ஏற்கனவே மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த மரு . எ.முகமது ஹக்கீம் என்பவரை முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் 179 நாட்களுக்கு பணியில் ஈடுபடுத்தவும் , அதற்காக மாதம் ஒன்றிற்கு ஒப்பந்தத் தொகையாக ரூ .60,000/- வழங்கவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.6,60,000/- க்கும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட உத்தேச செலவினத் தொகை ரூ .6,60,000/- க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தினை இம்மாநகராட்சி வரவு செலவு திட்டம் 2022-2023 தலைப்பு எண் 2101010 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) மரு.எ. முகமது ஹக்கீம் முற்றிலும் தற்காலிகமாக , அவசர அவசியம் கருதி ஒப்பந்த அடிப்படையில் மருத்துவ அலுவலராக பணிபுரிய உத்தரவு வழங்கலாம்.
4) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி மருத்துவருக்கு உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

ந.க.எண்.எச்7/4351/2021(மையம்)

**தீர்மானம் எண்: 36 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மைய அலுவலக வளாக த்திற்குள், பொதுநிதி 2021-2022ன் கீழ் , புதிதாக உயர்மின்னழுத்த மின்னிணைப்பு பெறுவதற்கு தேவையான 500 KVA திறன் கொண்ட மின்மாற்றி (Out door type, on load tap changer) ஒரு எண்ணிக்கையும், 1000 A MV Panel, DP Structure, Transformer yard புதிதாக உயர்மின்னழுத்த மின்னிணைப்பு பெறுவதற்கு தேவையான 500 KVA திறன் கொண்ட மின்மாற்றி புதைமின் வடங்கள் , பாதுகாப்பு உபகரணங்கள், earthing மற்றும் இதர பணிகளை ரூ .94.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .71/2021-2022ன் வாயிலாக 27.07.2021ம் தேதியன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோ ரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை நாளிதழில் விளம்பரம் செய்யப்ப ட்டதற்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.85,260/- செலவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற M/s. வி.பி. எலக்ட்ரிக்கல், சென்னை நிறுவனத்தி ன் ஒப்பந்தப்புள்ளியினை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி தீர்மானம் எண்.495 நாள்.20.09.2021ல் ஏற்று அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி நிறுவனத்திற்கு 28.09.2021ம் தேதியன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது . மேற்படி பணிக்கான ஒப்பந்தக்கட்டுப்பாடுகளின்படி 6 மாத காலத்திற்குள் 27.03.2022ம் தேதிக்குள் மேற்படி பணி முடிக்கப்பட்டிருக்க வேண்டியதில், இதுநாள் வரை ஆறுமாத காலம் முடிவடைந்த நிலையில் பணி துவக்கப்படாமல் இருந்து வருகிறது.

மேற்படி பணி துவக்கப்படாமல் இருப்பது குறித்து , ஒப்பந்தக்காரருக்கு 03.01.2022ம் தேதியன்று முதல் அறிவிப்பு கடிதமும் , 23.02.2022ம் தேதியன்று இரண்டாவது அறிவிப்பு கடிதமும் மற்றும் 07.03.2022ம் தேதியன்று இறுதி அறிவிப்பு கடிதங்கள் பதிவு தபால் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டதில் , நாளது தேதி வரை ஒப்பந்தக்காரரிடமிருந்து எவ்வித பதிலும் வரப்பெறவில்லை மற்றும் பணியும் துவக்கப்படவில்லை.

இதனால் மாநகராட்சி மைய அலுவலக வளாகத்திற்கும் மற்றும் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறைக்கு தேவையான மின்சாரம் பெற இயலாத நிலை உருவாகியுள்ளது.

மேற்கண்ட பணிக்கு 2020-2021ம் ஆண்டு பொதுப்பணித்துறை விலை விகித அட்டவணைப்படி ரூ .94.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்த ப்புள்ளி கோரப்பட்டதில், பணி மேற்கொள்ளப்படவில்லை என்பதால் , 2021-2022ம் ஆண்டு பொதுப்பணித்துறை விலை விகித அட்டவணைப்படி ரூ.95.25 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

எனவே மேற்கண்டப்பணி மேற்கொள்ளப்படாததால் , மேற்படி நிறுவனத்திற்கு வழங் கிய வேலை உத்திரவினை ரத்து செய்வதற்கும் , மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பர கட்டணத் தொகை ரூ .85,620/- மற்றும் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப் பட்டதற்கான கூடுதல் தொகை .ரூ.80,000/- இழப்பு ஏற்பட்டுள்ளதால் , மேற்படி ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை மொத்தம் ரூ .1,88,000/- முழுவதையும் பறிமுதல் [ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ .94,000/- (Kodak Mahindra Bank , Nilgiris, வங்கி வரைவோலை எண் .23629 நாள்.20.07.2021 ரூ.73,000/-, Kodak Mahindra Bank , Nilgiris, வங்கி வரைவோலை எண் .23633 நாள்.26.07.2021 ரூ.21,000/-) & கூடுதல் முன்வைப்புத் தொகை ரூ.94,000/-(இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வரைவோலை எண் .308086 நாள். 27.09.2021) செய்வதற்கும் மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி , பெறப்படும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டினை விட கூடுதலாக இருப்பின் அதற்கான கூடுதல் செலவினத்தையு ம் இவர்களிடமிருந்து ஈடு செய்வதற்கும் மற்றும் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு புதிதாக மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவினை ரத்து செய்வதற்கும் மற்றும் மாநகராட்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டுக்கு மேற்கண்ட நிறுவனம் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை ரூ.1,88,000/- முழுவதையும் பறிமுதல் செய்வதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஒப்பந்த ப்புள்ளி கோருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**இ1/5707/2021(மையம்)**

**தீர்மானம் எண்: 37 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:12**

இம்மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் அமைந்துள் ள டர்பைன் நீர்ப்பணி நிலையம் , கம்பரசம்பேட்டை மற்றும் அய்யாளம்மன் படித்துறை, கலெக்டர் வெல் நீர்ப்பணி நிலையத்தினை 02.04.2020 முதல் 01.04.2021 வரை ஓராண்டிற்கு இயக்கி பராமரிப்பு செய்திட மதிப்பீடு ரூ .37.00 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர் வாக அனுமதி எண் .38, நாள்.10.02.2020ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிகள் 28.02.2020ல் பெறப்பட்டு மெசர்ஸ் .ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ் , திருச்சி நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி எண் .139, நாள்.03.04.2020ல் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் அடிப்படையில் 02.04.2020 முதல் மேற்கண்ட நிறுவனம் தலைமை நீர்ப்பணி நிலையத்தினை சீராக நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில், வரும் 01.04.2022 அன்று, மேற்கூறப்பட்டுள்ள நிலையத்தினை இயக்கி பராமரிக்கும் ஓர் ஆண்டு காலம் நிறைவடைய உள்ளது . மேற்கண்ட பணிக்கு புதிதாக 2021–22ம் ஆண்டு விலை விபர பட்டியலின்படி , மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் பின்வருமாறு செலவினங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

| | | |
|---|---|---|
| 2019–20ம் ஆண்டு விலை விபர பட்டியலின்படி , மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.3,07,450/– (12 மாதங்களுக்கு) | : | ரூ.36,89,400/– |
| 2021–22ம் ஆண்டு விலை விபர பட்டியலின்படி , மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.3,76,969/– (12 மாதங்களுக்கு) | : | ரூ.45,23,628/– |
| வித்தியாச தொகை | : | ரூ. 8,34,228/– |
| விளம்பர செலவினம் | : | ரூ. 90,000/– |
| **மொத்த செலவினம்** | : | **ரூ.9,24,228/–** |

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும் , கோடை காலத்தை சமாளிக்கும் பொருட்டு, இந்நீர்ப்பணி நிலையத்தினை தொடர்ந்து இயக்கி பராமரிக்கப்பட வேண்டியுள்ளது . தற்போது பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கண்ட பணியினை நல்ல முறையில் மேற்கொண்டு வருகிறது . இந்நிலையில் மேற்கண்ட நிறுவனம் தொடர்ந்து ஓராண்டிற்கு , இப்பணியை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து 30.03.2022 அன்று சம்மத கடிதம் வழங்கியுள்ளது.

இதன்படி, மாநகராட்சிக்கு ஏ ற்படும் கூடுதல் செலவினத்தை தவிர்க்கும் பொருட்டும் , குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மெசர்ஸ் .ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ் , திருச்சி நிறுவனம் மூலம் டர்பைன் நீரேற்று நிலையத்தினை மேலும் ஓர் ஆண்டிற்கு இயக்கி பராமரிக்க, கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிடவும் , ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ.3,07,450/– (02.04.2022 முதல் 01.04.2023 வரை ஓர் ஆண்டிற்கு) வீதம் 12 மாதங்களுக்கு ஏற்படும் செலவினம் ரூ .36,89,400/–ஐ மேற்கொள்வதற்கும் அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட நீர்ப்பணி நிலையத்தினை 02.04.2022 முதல் 01.04.2023 வரை மேலும் ஓர் ஆண்டிற்கு பராமரிப்பு காலநீட்டிப்பு செய்து மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ .3,07,450/– வீதம் 12 மாதங்களுக்கு ஏற்படும் செலவின தொகை ரூ.36,89,400/– ஐ மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. இப்பணிக்கான செலவின தொகையினை 2022–23ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குடிநீர் வழங்கு பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305009) என்ற தலை ப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1300.00 இலட்சத்தில் இருந்து செலவு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/11546/2019/மையம்**

**தீர்மானம் எண்: 38 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்:13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் , கீழ்கண்டுள்ள பணிகளை கல்விநிதி 2021–2022ன் கீழ் மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் . 309 /2021–2022ன் வாயிலாக 12.04.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை , ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங் கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | **கல்விநிதி – 2021–22** | | |
| 1 | அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண் .09(பழைய வார்டு எண்.59)க்குப்பட்ட மாநகராட்சி நடுநிலைப்பள்ளி உறையூர் வடக்கு வாலாஜா ரோடு – ஸ்மார்ட் கிளாஸ் 5 எண்ணிக்கை அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல்.<br><br>மதிப்பீடு ரூ.86.00 இலட்சம்.<br><br>(இ8/3077/2022)(மை) | 1.மெர்சஸ். கே.எஸ். ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை.<br>0.05% குறைவு<br><br>2.மெர்சஸ்.டெம்பிள்டெக் இன்னோவேஷன்ஸ் பி.லிட், சென்னை.<br>0.14% அதிகம் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மெர்சஸ்.கே.எஸ்.ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை. நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண் .55(பழைய வார்டு எண் .40)க்குப்பட்ட பிராட்டியூர் உயர்நிலைப்பள்ளி வகுப்பறைகளுக்கு ஸ்மார்ட் கிளாஸ் வசதி திரை வழி வசதிகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல்.<br><br>மதிப்பீடு ரூ.86.00 இலட்சம்.<br><br>(இ8/3078/2022)(மை) | 1.மெர்சஸ். கே.எஸ். ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை.<br>0.04% குறைவு<br><br>2.மெர்சஸ்.டெம்பிள்டெக் இன்னோவேஷன்ஸ் பி.லிட், சென்னை.<br>0.15% அதிகம் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மெர்சஸ்.கே.எஸ்.ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை. நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 3 | அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண் .57(பழைய வார்டு எண் .40)க்குப்பட்ட எடமலைப்பட்டி புதூர் மாநகராட்சி தொடக்கப்பள்ளி வகுப்பு அறைகளுக்கு ஸ்மார்ட் கிளாஸ் வசதி திரை வழி வச திகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல்.<br><br>மதிப்பீடு ரூ.85.00 இலட்சம்.<br><br>(இ8/3079/2022)(மை) | 1.மெர்சஸ். கே.எஸ். ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை.<br>0.05% குறைவு<br><br>2.மெர்சஸ்.டெம்பிள்டெக் இன்னோவேஷன்ஸ் பி.லிட், சென்னை.<br>0.12% அதிகம் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மெர்சஸ்.கே.எஸ்.ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை. நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந் துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 4 | அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண்.57(பழைய வார்டு எண்.40)க்குப்பட்ட எடமலைப்பட்டி புதூர் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி வகுப்பு அறைகளுக்கு ஸ்மார்ட் கிளாஸ் வசதி திரை வழி வசதிகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல்.<br>மதிப்பீடு ரூ.85.00 இலட்சம்.<br>(இ8/3107/2022)(மை) | 1.மெர்சஸ். கே.எஸ். ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை.<br>0.05% குறைவு<br>2.மெர்சஸ்.டெம்பிள்டெக் இன்னோவேஷன்ஸ் பி.லிட், சென்னை.<br>0.12% அதிகம் | வரப்பெற்ற இ ரு ஒப்பந்தப்புள்ளிகளில் மெர்சஸ்.கே.எஸ்.ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை. நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 5 | அபிஷேகபுரம் கோட்டம் வார்டு எண்.09(பழைய வார்டு எண்.59)க்குப்பட்ட மாநகராட்சி நடுநிலைப்பள்ளி பாண்டமங்கலம் வடக்கு நாச்சியார் கோவில் ரோடு ஸ்மார்ட் கிளாஸ் அறை 4 எண்ணிக்கை அமைக்கும் பணியினை மேற்கொள்ளுதல்.<br>மதிப்பீடு ரூ.70.00 இலட்சம்.<br>(இ8/3080/2022)(மை) | 1.மெர்சஸ். கே.எஸ். ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை.<br>0.05% குறைவு<br>2.மெர்சஸ்.டெம்பிள்டெக் இன்னோவேஷன்ஸ் பி.லிட், சென்னை.<br>0.14% அதிகம் | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மெர்சஸ்.கே.எஸ்.ஸ்மார்ட் சொல்யூஷன்ஸ் பி.லிட்.சென்னை. நிறுவனத்தார் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையி ல் கண்டுள்ள பணி களுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.

**(கோப்பு எண்.இ8/ 3077 /2022)**

**தீர்மானம் எண்: 39 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் : 14**

இம்மாநகராட்சியின் ஐந்து மண்டல பகுதிகளுக்கும் உட்பட்ட 65 வார்டுகளில் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் நகரில் அவ்வப்போது கோவில்களில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று மற்றும் டெங்கு கொசு தடுப்பு நடவடிக்கைக்கும் பல்வேறு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது நீர்த்த சுண்ணாம்பு இருப்பு மிகவும் குறைவாக உள்ளதாகவும் , மேலும் அனைத்து மண்டல ங்களுக்கு மொத்தம் 100 டன் நீர்த்த சுண்ணாம்பு வாங்கி வழங்குமாறும் அனைத்து மண்டல சுகாதார ஆய்வாளர்களால் தேவைக்கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்பு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி தொகை அடிப்படையாக வைத்து ரூ.9,50,000/- க்கு மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்ய மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்கண்ட பணியினை ரூ.9,50,000/- மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தினை இம்மாநகராட்சி 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட தலைப்பு எண்2303005 இல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்கள் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம்.

**கோப்பு எண்.எச்4/6630/2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 40 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 15**

இம்மாநகராட்சியின் ஐந்து மண்டல பகுதிகளுக் கும் உட்பட்ட 65 வார்டுகளில் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் நகரில் அவ்வப்போது கோவில்களில் நடைபெறும் திருவிழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு கிருமி நாசினியான பிளீச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது . தற்பொழுது கொரோனா வைரஸ் தொற்று மற்றும் டெங்கு கொசு தடுப்பு நடவடிக்கைக்கும் பல்வேறு சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது பிளீச்சிங் பவுடர் இருப்பு மிகவும் குறைவாக உள்ளதாகவும், மேலும் அனைத்து மண்டலங்களுக்கு மொத்தம் 20,000 கிலோ பிளீச்சிங் பவுடர் வாங்கி வழங்குமாறும் அனைத்து மண்டல சுகாதார ஆய்வாளர்களால் தேவைக்கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே கிருமிநாசினியான பிளீச்சிங் பவுடர் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி தொகை அடிப்படையாக வைத்து ரூ.9,40,000/- க்கு மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்ய மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மேற்கண்ட பணியினை ரூ.9,40,000/- மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தினை இம்மாநகராட்சி 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட தலைப்பு எண்2303005 இல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்கள் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை ஏற்கலாம்.

**கோப்பு எண்.எச்4/6631/2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 41 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் :16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொது நிதி 2022-2023ன் கீழ் , பொது சுகாதார பணிகளுக்கு தேவையான துப்புரவு தளவாட சாமான்கள் மற்றும் பாதுகாப்பு பொருட்கள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 01/2022-2023 (மதிப்பீட்டு விலை 42.50 இலட்சம்) வாயிலாக 04.05.2022 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் நேரில் பெறப்பட்டது . மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை பிரித்து சரிபார்க்கப்பட்டதில் M/S.Aparna Industries, Puducherry. நிறுவனம் மட்டுமே தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்தது. எனவே தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ள M/S.Aparna Industries, Puducherry நிறுவனத்தின் விலைப்புள்ளி உறையைப் பிரிக்க ஆணையர் அவர்கள் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து விலைப்புள்ளி உறை பிரிக்கப்பட்டதில் M/S.Aparna Industries, Puducherry நிறுவனம் மதிப்பீட்டு விலையைவிட 1.65 சதவீதம் விலை குறைவாக அளித்திருந்தது.

இந்நிலையில் மேலும் விலைகுறைப்பு செய்யுமாறு மேற்படி நிறுவனத்திற்கு கடிதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து மதிப்பீட்டு விலையைவிட 2.97 சதவீதம் விலை குறைவாக விநியோகம் செய்யும் பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளது. எனவே மதிப்பீட்டு விலையைவிட 2.97 சதவீதம் விலை குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/S.Aparna Industries, Puducherry நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் , இந்நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மதிப்பீட்டு விலையைவிட 2.97 சதவீதம் விலை குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/S.Aparna Industries, Puducherry நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் , இந்நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மாமன்றத்தி ன் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்

**[எச்2/4158/2022 (மையம்)]**

**தீர்மானம் எண்: 42 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் :17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , கோ–அபிஷேகபுரம் கோட்டம் , வார்டு எண் .57க்குட்பட்ட கோணக்கரை சாலையில் குடமுருட்டி பாலம் அருகில் கொள்ளிடம் கிணறு எண் .3ல் இருந்து செல்லும் 800 எம்.எம் விட்டமுள்ள குடிநீர் பிரதான குழாயில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி சாலையில் செல்கிறது. எனவே மேற்கண்ட குழாய் உடைப்பினை சரிசெய்வது அவசியமாகிறது.

ஆகவே குடிநீர் தேவையின்றி வீணாவதை தடுக்கும் பொருட்டு கோணக்கரை சாலையில் குடமுருட்டி பா லம் அருகில் 800 மி.மீ விட்டமுள்ள டிஐ பிரதான குழாயில் ஏற்பட்டுள்ள உடைப்பினை சரிசெய்ய மதிப்பீடு ரூ .4.35 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு , இப்பணியினை மதிப்பீட்டைக் காட்டிலும் 0.07% குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த மெசர்ஸ் .விஸ்வாஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் , கன்னியாகுமரி ஒப்பந்ததாரர் மூலம் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும் , பொதுமக்கள் நலன் கருதியும் 1994ம் ஆண்டு திருச்சிரா ப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 6131 / 2021 / மையம்)**

**தீர்மானம் எண்: 43 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள் :18

இம்மாநகராட்சியில் ஐந்து வார்டு குழுக்கள், மகப்பேறு மையங்கள், மருந்தகங்கள் மற்றும் அலுவலகங்களில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்கும் பொருட்டு , சம்மந்தப்பட்ட வார்டு குழுக்கள் மற்றும் மைய அலுவலகங்களில் பெறப்பட்ட பட்டியலின்படி 1133 நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

தற்போது 2020–2021ம் ஆண்டிற்கான இரண்டு தவணை சீருடைகள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது. 2019–2020ம் ஆண்டிற்கான இரண்டு தவணை சீருடைகள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பிறகு இறுதி இருப்பு போக தற்போது வாங்கி வழங்க வேண்டிய சீருடைகளின் எண்ணிக்கை விவரம் கீழ்க்கண்ட அட்டவணையின்படி கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | தூய்மை பணியாளர்களின் சீருடை விவரம் | தற்போது பணியாளர்கள் எண்ணிக்கை | வாங்க வேண்டிய சீருடைகளின் எண்ணிக்கை | 2019–2020ம் ஆண்டின் இறுதி இருப்பு | தற்போது வாங்க வேண்டிய சீருடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | ஆண் | 652 | 1304 | 100 | 1204 |
| 2 | பெண் | 481 | 962 | 100 | 862 |
| 3 | ஊதா நிற நூலாடை | 1133 | 1133 | 100 | 1033 |

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களின் சீருடைகளை தமிழ்நா டு டெக்ஸ்டைல்ஸ் , காதி கிராப்ட் மற்றும் கோஆப்டெக்ஸ் பொதிகை அரசு நிறுவனங்களில் கொள்முதல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது . மேலும் உதவி இயக்குநர், காதி கதர் கிராம தொழில்கள் , திருச்சி அவர்களின் கடிதம் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் சுற்றறி க்கையில் அரசு பணியாளர்களின் சீருடை ரகங்களை காதி நிறுவனத்தில் வாங்கி கதர் விற்பனை குறியீட்டை எய்திட போதிய ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று கதர் கிராம தொழில்கள், திருச்சி நிறுவனத்திடம் சீருடைகள் விநியோகம் செய்யுமாறு 24.01.2022 அன்று விநியோக உத்தரவு வழங்கப்பட்டது . விநியோக உத்தரவு மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 90 நாட்களாகியும் சீருடைகளை விநியோகம் செய்யப்படாததை தொடர்ந்து அறிவிப்பு கடிதம் மற்றும் இறுதி அறிவிப்பு கடிதம் மேற்படி நிறு வனத்திற்கு அனுப்பப்பட்டும் , மேற்படி நிறுவனத்திலிருந்து சீருடைகள் ஏதும் விநியோகம் செய்யப்படவில்லை . மேலும் சீருடை விநியோகம் செய்வது சம்மந்தமாக எந்தவித தகவலுமில்லை. எனவே கதர் கிராம தொழில்கள் , திருச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விநியோக உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

எனவே, கடந்த ஆண்டு சீருடைகள் விநியோகம் செய்த தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் , கோயம்புத்தூர், நிறுவனத்திடம் மேற்கண்ட சீருடைகளின் விலைப்புள்ளியை பெற்று கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு கொள்முதல் செய்ய வேண்டிய சீருடைகளின் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எ ண் | சீருடை விவரம் | துணியின் எண்ணி க்கை | துணிகளின் அளவு | துணிகளின் மொத்த அளவு | துணி ஒன்றிற்கான விலைப் புள்ளித் தொகை ரூ. | சீருடைக்கான மொத்தம் செலவு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | காக்கி சட்டை | 1204 | 1.75 மீ | 2107 மீ | 94.50 / மீ | 199111.50 |
| 2 | காக்கி முழுக்கால் சட்டை | 1204 | 1.30 மீ | 1565.20 மீ | 173.25 / மீ | 271170.90 |
| 3 | நூல் புடவை | 862 | 5.50 மீ | 862 எண்கள் | 729.75 / 1 எண் | 629044.50 |
| 4 | நூல் ரவிக்கை துணி | 862 | 0.90 மீ | 775.80 மீ | 94.50 / மீ | 73313.10 |
| 5 | ஊதா நிற நூலாடை | 1033 | 2.00 மீ | 2066 மீ | 94.50 / மீ | 195237.00 |
| மொத்தம் | | | | | | 1367877.00 |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு இம்மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சீருடைகளை தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் , கோயம்புத்தூர் நிறுவனத்தில் கொள்முதல் செய்யவும் இதற்கு ஆகும் செலவினம் ரூ . **13,67,877/–**தொகைக்கும் மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட செலவினத் தொகை ரூ. **13,67,877**/–க்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. இச்செலவினத்தை 2022–2023 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தலைப்பு எண் 210 2004 இன் கீழ் சீருடைகளுக்காக ரூ.30.000 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**எச்4/10705/2021(மையம்)**

**தீர்மானம் எண்: 44 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

பொருள்: 19

இம்மாநகராட்சி கட்டுப்பாட்டில் அமைந்துள்ள அரியமங்கலம் கோட்ட பகுதிகளிலுள்ள 19 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொ ட்டிகளை சுத்தம் செய்தல் , பேக்கிங் செய்தல், வால்வு பழுதுசீர் செய்தல் மற்றும் சோடியம் ஹைப்போ குளோரைட் செலுத்தும் கருவிகளை 01.01.2021 முதல் ஓராண்டிற்கு பராமரிப்பு செய்திட மதிப்பீடு ரூ .74.80 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி எண் .589, நாள்.11.10.2019ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் , ஒப்பந்தப்புள்ளிகள் 06.11.2019ல் பெறப்பட்டு , மெசர்ஸ்.ஏ.எஸ். பவர் சொல்யூஷன்ஸ் , திருச்சி நிறுவனம் வழங்கிய குறைவான விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி எண் .685, நாள்.16.12.2019ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில் , 01.01.2020 முதல் மேற்கண்ட நிறுவனம் 19 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை கடந்த இரண்டு ஆண்டுகளாக நல்ல முறையில் இயக்கி பராமரித்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் வரும் 31.12.2021 உடன் மேற்கூறப்பட்டுள்ள 19 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை பராமரிக்கும் காலம் நிறைவடைந்ததால், 01.01.2022 முதல் 31.03.22 வரை 3 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் , வரும் 31.03.2022 உடன் முடிவடையவுள்ளது . மேற்கண்ட பணிக்கு புதிதாக 2021–22ம் ஆண்டு விலை விபர பட்டியலின்படி , மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் மாநகராட்சிக்கு பெரும் நிதி நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட நிறுவனம் தொடர்ந்து , இப்பணியை பழைய விலை விகிதத்திலேயே செய்திட , விருப்பம் தெரிவித்து 30.03.2022 அன்று சம்மத கடிதம் வழங்கியுள்ளது.

எனவே, மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ் , திருச்சி நிறுவனத்தார் மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை கடந்த காலங்களில் நல்ல முறையில் பராமரித்து வருவதால், மேலும் 9 மாதங்களுக்கு மட்டும் பராமரிக்க கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கிடவும் , ஏற்கனவே வழங்கி வரும் **மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ .6,21,400/– வீதம் 9 மாதங்களுக்கு (01.04.2022 முதல் 31.12.2022 முடிய) ஏற்படும் செலவினம் ரூ.55,92,600/–ஐ** மேற்கொள்ளவும் அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. 01.04.2022 முதல் 31.12.2022 முடிய 9 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து மெசர்ஸ்.ஏ.எஸ்.பவர் சொல்யூஷன்ஸ் , திருச்சி நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கிடவும், ஏற்கனவே வழங்கி வரும் மாதாந்திர ஒப்பந்த தொகை ரூ .6,21,400/– வீதம் 9 மாதங்களுக்கு ஏற்படும் செலவின தொகை ரூ .55,92,600/– ஐ மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையினை 2022–23ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் (2305009) குடிநீர் வழங்கு பணிகள் – பராமரிப்பு செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1200.00 இலட்சத்திலிருந்து செலவு செய் து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/9818/2019/மையம்**

**தீர்மானம் எண்: 45 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

பொருள்: 20

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , கம்பரசம்பேட்டை பகுதியில் அமைந்துள்ள தலைமை நீர்ப்பணி நிலையத்தில் சீர்மிகு நகர திட்டத்தின் கீ ழ் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக 20 இலட்சம் லிட்டர் கொள்ளவுள்ள சமநிலை நீர்தேக்க தொட்டி (Master balancing Reservoir ) அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது . அப்பகுதியில் பழுதடைந்துள்ள நிலையில் ஸ்திர தன்மையின்றி உள்ள மாநகராட்சி அலுவலர் கு டியிருப்பு கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி , உள்ளதை உள்ளபடி என ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய ஏலத்தில் விடுவதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.02.2022ந் தேதிய ஒப்புதலின்படி , அனைத்து கோட்டம் மற்றும் மைய அலுவலக விளம்பர பலகை விளம்பரம் செய்யப்பட்டு , ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏல அறிவிப்பு எண் . 316 /2021–22ன் வாயிலாக 05.04.2022 அன்று முதன் முறையாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இப்பணிக்கான பொது ஏலத்தில் ஏலதாரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை . ஒப்பந்தப்புள்ளியை பொறுத்தமட்டில் கீழ்க்கண்ட 3 நபர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் மைய அலுவலக பொறியியற் பிரிவில் உள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | இனங்களின் விபரம் | ஏலதாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளி கோரிய நபர்கள் விபரம் | வைப்பு தொகை செலுத்திய விபரம் | கோரும் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமை நீர்ப்பணி நிலைய வளாகத்தில் பழுதான நிலையில் உள்ள அலுவலர் குடியிருப்பு கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அகற்றிவிட்டு இடிபாடுகளை அப்புறப்படுத்தும் பணி | ஏலதாரர்கள் யாரும் கலந்து கொள்ளவில் லை | **1. மெசர்ஸ். ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ்,** 50, சின்ன செட்டி தெரு , உறையூர், திருச்சி | ரூ.13,800/– HDFC Bank DD no.035915 Dt.04/04/22 | ரூ.1,02,000 + GST |
| | | | **2. மெசர்ஸ். KA டிம்பர் டிரேடர்ஸ்,** எண்.44, மாரியம்மன் கோவில் தெரு, அண்ணா நகர் , தென்னூர், திருச்சி | ரூ.13,800/– IDBI Bank DD no.015040 Dt.04/04/22 | ரூ.92,000 + GST |
| | | | **1. மெசர்ஸ். அப்சல் டிரேடர்ஸ்,** கதவு எண்.6, கடை எண்.3, GMS காம்ப்ளக்ஸ், ஜெயில் தெரு , மதுரை ரோடு , பாலக்கரை, திருச்சி | ரூ.13,800/– Indian Bank DD no.114608 Dt.04/04/22 | ரூ.90,000 + GST |

மேற்கண்ட பணியினை மதிப்பீட்டு தொகையை விட குறைவான விலையிலும், ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட மற்ற ஒப்பந்ததாரர்களை விட கூடுதலான விலையில் இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள வ .எண்.1ல் கண்டுள்ள **மெசர்ஸ்.ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ் ,** திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ள ரூ.1,02,000/– இரசீது எண்.086/S1/1/22–23–0000384 நாள்.20.04.2022 மற்றும் சரக்கு & சேவை வரி (18%) ரூ.18,360/– இரசீது எண்.086/S1/1/22–23/0000383 நாள்.20.04.2022 ஆக மொத்தம் ரூ.1,20,360/– மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் கரூவூலத்தில் ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, வ.எண்.1ல் கண்டுள்ள **மெசர்ஸ். ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ் ,** திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ள ரூ.1,02,000/– + சரக்கு & சேவை வரி (18%) ரூ.18,360/– ஐ செலுத்தியுள்ளதை ஏற்கவும் , மேற்கண்ட குடியிருப்பு கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அகற்றிவிட்டு இடிபாடுகளை அப்புறப்படுத்தவும், சம்மந்தப்பட்ட இருப்பு / சொத்து பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்யவும் அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. சீர்மிகு நகர திட்டப் பணியின் அவசர அவசியத்தை கருதி , தலைமை நீர்ப்பணி நிலைய வளாகத்தில் பழுதான நிலையில் உள்ள அலுவலர் குடியிருப் பு கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அகற்றிவிட்டு **உள்ளது உள்ளபடி** என்ற அடிப்படையில், இடிபாடுகளை உடன் அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால் , ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட மற்ற ஒப்பந்ததாரர்களை விட கூடுதலான விலை சமர்ப்பித்துள்ள **மெசர்ஸ். ஸ்ரீ பாலாயி பாப்பாயி டிரேடர்ஸ் ,** திருச்சி நிறுவனத்தாரது ஒப்பந்த தொகை ரூ .1,02,000/– + சரக்கு & சேவை வரி (18%) ரூ.18,360/– ஆக மொத்தம் ரூ.1,20,360/–ஐ ஏற்கலாம்.
2. கட்டிடத்தை முற்றிலுமாக இடித்து அப்புறப்படுத்தப்பட்ட பிறகு சம்மந்தப்பட்ட இருப்பு / சொத்து பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்ய அனுமதி அளிக்கலாம்.
3. ஒப்பந்தப்புள்ளி கிடைக்கபெறாத ஒப்பந்ததாரர்களின் வைப்புதொகையை திரும்ப வழுங்கவும் அனுமதி அளிக்கலாம்.

**இ4/ 3779/2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 46 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

பொருள்: 21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் மற்றும் கோ அபிஷேகபுரம் கோட்டம் ஆகிய பகுதிகளில் **உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி(I & A Fund)** 2022–23ம் ஆண்டில் கீழ்கண்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் தாங்குசுவர் அமைக்கும் பணிகள் பொதுமக்கள் நலன் கருதி மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது. எனவே கீழ்கண்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் தாங்குசுவர் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ந.க.எண்.9151/2022/டிபி1 நாள்.18.04.2022ம் தேதிய கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பின்வரும் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றம் தாங்குசுவர் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டப்பணி விபரம் | மதிப்பீட்டு (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் .50 (பழைய வா ர்டு எண் .23)க்குட்பட்ட காஜாபேட்டை மெயின் ரோடு மற்றும் மதுரை ரோடு (மோட்ச்ச ராக்கினி தேவலாயம் முதல் உய்யக்கொண்டான் வாய்கால் வரை ) உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 2.00 |
| 2 | வார்டு எண் .08க்குட்பட்ட சோழம்பாறை ரோடு வாய்காலில் (குடமுருட்டி ஆற்று அருகி ல்) ஸ்லூஸ் வால்வுடன் (Sluice Valve ) தடுப்புசுவர் மற்றும் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணி. | 2.46 |
| **மொத்தம்** | | **4.46** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது அனுமதி பெறுவதற்கும், கருத்துரு அனுப்பி வைப்பதற்கும் மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. மேற்கண்ட வரிசை எண்.01 மற்றும் 02ல் உள்ள பணிக்களுக்கான மதிப்பீடுகளுக்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை 2022–23ம் ஆண்டிற்கான **உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியின் (I & A Fund)** கீழ் **ரூ.4.46** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.

**இ2/4952/2022(மையம்)**

**தீர்மானம் எண்: 47 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 22**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2022–2023ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கையின் போது "மாநகராட்சி பகுதிகளில் நவீன எரிவாயு தகன மேடை (LPG) கட்டும் பணிகள் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளதன் படி , திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் மேற்படி நவீன எரிவாயு தகன (LPG) மையங்களை ஏற்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடிதம் ந .க.எண்.20543/2021/தி2–3 நாள்.22.04.2022ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பின்வரும் இடங்களில் நவீன எரிவாயு தகன மேடை (LPG) அமைப்பதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப் பட்டுள்ளது.

| வ. எண் | திட்டப்பணி விபரம் | மதிப்பீட்டு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| வார்டு குழு எண்.V | | |
| 1. | வார்டு எண் .24க்குட்பட்ட சின்டிகேட் பேங் க் காலனி எரிவாயு மையத்தில் நவீன எரிவாயு தகன மேடை (LPG) கட்டும் பணி. | 250.00 |
| 2. | வார்டு எண்.28க்குட்பட்ட குழுமிக்கரை எரிவாயு மையத்தில் நவீன எரிவாயு தகன மேடை (LPG) கட்டும் பணி. | 250.00 |
| | **மொத்தம்** | **500.00** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வா க இயக்குநர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.
3. மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான தொகையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பெற்று இப்பணிகளை மேற்கொள்ளலாம்.

**இ2/5279 /2021(மையம்)**

**தீர்மானம் எண்: 48 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 23**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , கோ–அபிஷேகபுரம் கோட்டம் , வார்டு எண் .60க்குட்பட்ட எழில் நகர் பகுதியில் குடிநீர் சரிவர வரவில்லை என பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில் மேற்கண்ட எழில் நகர் பகுதியில் ஆய்வு மேற்கொண்ட நகரப் பொறியாளர் மற்றும் நிர்வாக பொறியாளர் ஆகியோர் மேற்படி பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்து சுமார் 20 வருடங்களுக்கு மேலாக உள்ளதால் பகிர்மானக் குழாய் பழுதடைந்திருக்கலாம் எனவும், அதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனவும் இப்பகுதிக்கு புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க மதிப்பீடு தயார் செய்யுமாறும் அறிவுறுத்தினார்கள்.

எனவே பொதுமக் கள் நலன் கருதி வார்டு எண் .60க்குட்பட்ட எழில் நகர் பகுதிக்கு புதிதாக குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்கவும், சிவா நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி முதல் கல்நாயக்கன் தெரு பிரதான குழாயினை ஆய்வு செய்யவும் **மதிப்பீடு ரூ .2.25 இலட்சத்திற்கு** தயார் செய்யப்பட்டு, இப்பணியினை **மதிப்பீட்டைக் காட்டிலும் 0.14% குறைந்த விலைப்புள்ளியில் செய்து தர சம்மதம் தெரிவித்த திருS.பெரியசாமி ஒப்பந்ததாரர்** மூலம் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும் , பொதுமக்கள் நலன் கருதியும் 1994ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ4/ 5695 / 2021 / மையம்)**

**தீர்மானம் எண்: 49 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

பொருள்: 24

தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.06.2021ம் தேதிய ஒப்புதலின்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , அரியமங்கலம் கோட்டத்திற்குரிய 18 வார்டுகளில் செயல்படும் நுண்உர செயலாக்க மையங்களில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் தற்காலிக மனித ஆற்றல் பெற்று கீழ்கண்ட அட்டவணையில் கண் டுள்ள எண்ணிக்கை விவரப்படி ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை தூய்மைப்பணி மேற்கொள்ளவும் , அதற்கான செலவினத்தினை மேற்கொள்ளவும் முன் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

| வ.எண் | வார்டு எண் | திடக்கழிவு மேலாண்மை குழுக்கள் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 14 | அரிய கிராமத்துக்குயில் (MCC W14) | 19 |
| 2 | 19 | அரிய மல்லிகைப்பூ(SHG W19) | 13 |
| 3 | 19 | அரிய ரோஜாப்பூ (SHG W19) | 15 |
| 4 | 21 | அரிய அன்னை தெரசா (MCC W21) | 19 |
| 5 | 27 | அரிய வேப்பம்பூ (MCC W27) | 21 |
| 6 | 33 | அரிய தாமரை (MCC W33) | 19 |
| 7 | 26 | அரிய மருதாணி (MCC W26) | 17 |
| 8 | 28 | அரிய வண்ணமலர் (Dry Waste W28) | 15 |
| 9 | 29 | அரிய வேப்பம்பூ (Dry Waste W29) | 16 |
| 10 | 61 | அரிய தீபசக்தி (Dry Waste W61) | 12 |
| 11 | 62 | அரிய வானவில் (Dry Waste W62) | 15 |
| கூடுதல் | | | 181 |

இந்நிலையில் எதிர்வரும் நிதியாண்டிற்கு (2022-2023) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 181 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்கண்டவாறு 181 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தும் நிகழ்வில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியாளர்களின் எண்ணிக்கை | வேலை நாட்கள் | மொத்த மனித வேலை நாட்கள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ஊதியம் ரூ | ஊதியம் (4X5) ரூ. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF 13%) (6X13%) நிர்வாக பங்கு தொகை | ESI – Employees State Insurance (6x3.25 %) நிர்வாக பங்கு தொகை ரூ. | மொத்த ஊதியம் (6+7+8) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 181 எண்ணிக்கை | 91 நாட்கள் (01.04.2022 முதல் 30.06.2022 வரை | 16471 | 461 | 75,93,131/- | 9,87,107/- | 2,46,776/- | 8827015/- |

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண்.9ல் கண்டுள்ளவாறு 01/04/2022 முதல் 30/06/2022 வரை 3 மாத காலத்திற்கு 181 எண்ணிக்கையில் தற்காலிக தூய்மை பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.88,27,015/- ஆக கணக்கிடப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை பணியில் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 வரை 3 மாத காலத்திற்க பணி நீடிப் பு செய்யவும் , அதற்குண்டான செலவினத் தொகை ரூ .88,27,015/-க்கு மாமன்ற அனுமதி வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. திடக்கழிவு மேலாண்மை பணியில் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை 01/04/2022 முதல் 30/06/2022 வரை 3 மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்ய அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.88,27,015/- அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இம்மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கை (2022-2023) கணக்கு தலைப்பு எண் .2101010ன் கீழ் மேற்கொள் ள அனுமதி வழங்கலாம்.

**பி2/1389/2022(அரிய)**

**தீர்மானம் எண்: 50 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்: 25**

தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.06.2021ம் தேதிய ஒப்புதலின்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , அரியமங்கலம் கோட்டத்திற்குரிய 18 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள எண்ணிக்கையின் அடிப்படையில் தற்காலிக தூய்மைப்பணியாளர் 181 எண்ணிக்கையில் ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை ஊதியம் வழங்க முன் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ.எண் | வார்டு எண் | திடக்கழிவு மேலாண்மை குழுக்கள் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 61 | தூய்மை இந்தியா குழு 61 | 20 |
| 2 | 62 | தென்றல் குழு 62 | 20 |
| 3 | 64 | தீபம் ஆண்கள் மற்றும் பெண்கள் குழு 64 | 19 |
| 4 | 7, 28, 29 | விடிவெள்ளி ஆண்கள் குழு 7,28,29 | 14 |
| 5 | 14 | வெண்புறா ஆண்கள் குழு 14 | 19 |
| 6 | 19, 22, 24 | விடிவெள்ளி ஆண்கள் குழு 19,22,24 | 20 |
| 7 | 25 | ஆலயம் ஆண்கள் குழு 25 | 19 |
| 8 | 61 | முழுநிலா ஆண்கள் குழு 61 | 14 |
| 9 | காந்தி மார்க்கெட் | மகாத்மா காந்தி குழு | 18 |
| 10 | காந்தி மார்க்கெட் | மகாத்மா காந்தி குழு | 18 |
| **கூடுதல்** | | | **181** |

இந்நிலையில் எதிர்வரும் நிதியாண்டிற்கு (2022-2023) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 181 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்கண்டவாறு 181 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தும் நிகழ்வில் அவர்க ளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாளர்களின் எண்ணிக்கை | வேலை நாட்கள் | மொத்த மனித வேலைநாட்கள் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ஊதியம் ரூ | ஊதியம் (4X5) ரூ. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF 13%) (6X13%) நிர்வாக பங்கு தொகை | ESI – Employees State Insurance (6x3.25%) நிர்வாக பங்கு தொகை ரூ | மொத்த ஊதியம் (6+7+8) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 181 எண்ணிக்கை | 91 நாட்கள் (01.04.2022 முதல் 30.06.2022 வரை | 16471 | 461 | 75,93,131/- | 9,87,107/- | 2,46,776/- | 8827015/- |

முன்பக்க அட்டவணையில் கலம் எண்.9ல் கண்டுள்ளவாறு 01/04/2022 முதல் 30/06/2022 வரை 3 மாத காலத்திற்கு 181 எண்ணிக்கையில் தற்காலிக தூய்மை பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ .88,27,015/– ஆக கணக்கிடப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை பணியில் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 வரை 3 மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்யவும் , அதற்குண்டான செலவினத் தொகை ரூ .88,27,015/–க்கு மாமன்ற அனுமதி வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. திடக்கழிவு மேலாண்மை பணியில் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை 01/04/2022 முதல் 30/06/2022 வரை 3 மாத காலத்திற்கு பணி நீடிப்பு செய்ய அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.88,27,015/– அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இம்மாநகராட்சி வர வு செலவு திட்ட அறிக்கை (2022–2023) கணக்கு தலைப்பு எண் .2101010ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**பி2/1390/2022(அரிய)**

**தீர்மானம் எண்: 51 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் :26**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண் IV குட்பட்ட பழைய வாரடு எண் 35,37,38,39,44,46 மற்றும் 47 ஆகிய வார்டு பகுதிகளில் உள்ள நுண் உர செயலாக்க மையங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தூய்மைப் பணியாளர்கள் நிலைகளில் இம்மாநகராட்சியில் பல்வேறு காரணங்களினால் ஏற்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களின் அடிப்படையில் மற்றும் மாநகராட்சியை தூய்மையாகப் பராமரிக்க போதிய துப்புரவுப் பணியாளர் இல்லாத நிலையில் நுண் உர செயலாக்க பணியினை 35,37,38,39,44,46 மற்றும் 47 ஆகிய வார்டு பகுதிகளில் 144 மனித ஆற்றல்கள் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| Sl. No | Name | Ward (old) | Ward (New) | Total No.of. Workers |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| 1 | IMAYAM | 35 | 61 | 19 |
| 2 | MULLAI MALAR | 37 | 65 | 20 |
| 3 | THENDRAL | 38 | 63,64 | 21 |
| 4 | PASUMAI POONGA | 39 | 62 | 23 |
| 5 | THAMARAIKODI | 44 | 53 | 20 |
| 6 | SENJUDAR | 46 | 54 | 21 |
| 7 | SEMBARUTHI | 47 | 52 | 20 |
| | TOTAL | | | **144** |

இந்நிலையில் எதிர்வரும் நிதியாண்டிற்கு ( 2022–2023) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மண்டலம் எண் IV க்குட்பட்ட 144 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

இவ்வாறு பணி அமர்த்துவதால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது

| வ.எண் | பணியாளர்களின் எண்ணிக்கை | வேலை நாட்கள் | மொத்த மனித வேலை நாட்கள் | நாள் 1க்கு நபர் 1க்கு ஊதியம் ரூ. | ஊதியம் கலம் (4X5) ரூ. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13 % (கலம் 6X 13% நிர்வாக பங்கு தொகை | ESI நிர்வாக பங்கு தொகை (கலம் 6X3.25%) | மொத்த ஊதியம் கலம் 6+7+8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 144 | 91 | 113104 | 461 | 6040944 | 785323 | 196331 | 7022598 |

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண் 9ல் கண்டுள்ளவாறு 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாத காலத்திற்கு 144 எண்ணிக்கையில் தற்காலிக தூய்மைப்பணியாளர்களை ஈடுபடுத்த ஆகும் செலவின தொகை ரூ. 7022598/– ஆக கணக்கிடப்பட்டுள்ளது

திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்தும் , இதற்கான உத்தேச செலவினம் ஊதியமாக ரூ. 7022598/– க்கு மாமன்ற அனுமதி வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அ.கு:– 1. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்யஅனுமதி வழங்கலாம்

2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 7022598/– க்கு அனுமதி வழங்கலாம்.

3. மேற்கண்ட செலவின தொகையினை இம்மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கை (22– 23) க்கு கணக்கு தலைப்பு எண் 2101010ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

எச்1/ 3777 /2021(பொன்)

**தீர்மானம் எண்: 52 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்:27**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு எண் II &III க்குட்பட்ட பழைய வார்டு எண் 31,36,43, மற்றும் 63,65 ஆகிய வார்டு பகுதிகளில் உள்ள நுண் உர செயலாக்க மையங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தூய்மைப் பணியாளர்கள நிலைகளில் இம்மாநகராட்சியில் பல்வேறு காரணங்களினால் ஏற்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் காலிப் பணியிடங்களின் அடிப்படையில் மற்றும் மாநகராட்சியை தூய்மையாகப் பராமரிக்க போதிய துப்புரவுப் பணியாளர் இல்லாத நிலையில் நுண் உர செயலாக்க பணியினை 31,36,43, மற்றும் 63,65 ஆகிய வார்டு பகுதிகளில் 84 மனித ஆற்றல்கள் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| Sl. No | Name | Ward | Total No.of. Workers |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | APJ ABDUL KALAM | 31 | 20 |
| 2 | KURUNICHI MALAR | 36 | 20 |
| 3 | VINAYAGA | 43 | 19 |
| 4 | RUTHRA | 63,65 | 25 |
| | TOTAL | | **84** |

இந்நிலையில் எதிர்வரும் நிதியாண்டிற்கு ( 2022–2023) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள மண்டலம் எண் II &III க்குட்பட்ட 84 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

இவ்வாறு பணி அமர்த்துவதால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியாளர்களின் எண்ணிக்கை | வேலை நாட்கள் | மொத்த மனித வேலை நாட்கள் | நாள் 1க்கு நபர் 1க்கு ஊதியம் ரூ. | ஊதியம் கலம் (4X5) ரூ. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13 % (கலம் 6X 13% நிர்வாக பங்கு தொகை | ESI நிர்வாக பங்கு தொகை (கலம் 6X3.25%) | மொத்த ஊதியம் கலம் 6+7+8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 84 | 91 | 7644 | 461 | 3523884 | 458105 | 114526 | 4096515 |

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண் 9ல் கண்டுள்ளவாறு 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாத காலத்திற்கு 84 எண்ணிக்கையில் தற்காலிக தூய்மைப்பணியாளர்களை ஈடுபடுத்த ஆகும் செலவின தொகை ரூ. 4096515/- ஆக கணக்கிடப்பட்டுள்ளது

திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழு மூலம் பணியாளர்கள் பணி நீட்டிப்பு செய்தும் , இதற்கான உத்தேச செலவினம் ஊதியமாக ரூ. 4096515/- க்கு மாமன்ற அனுமதி வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அ.கு:-

1. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்யஅனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினதொகை ரூ. 4096515/- க்கு அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட செலவின தொகையினை இம்மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கை (22- 23) க்கு கணக்கு தலைப்பு எண் 2101010ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

எச்1/ 3777 /2021(பொன்)

**தீர்மானம் எண்: 53 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள்:28

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் IV 17 வார்டுகளில் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக துப்புரவுப் பணியாளர்கள் நிலைகளில் இம்மாநகராட்சியில் பல்வேறு காரணங்களினால் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களின் அடிப்படையில் மற்றும் மாநகராட்சியை தூய்மையாகப் பராமரிக்க ஏதுவாக துப்புரவுப் பணியாளர் நிலையில் அளவுகோலின் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மைப் பணியினை 37, 38, 39, 65 மத்திய பேருந்து நிலையம் , ஆகிய பகுதிகளில் 31.03.2022 வரை சுய உதவிக் குழுக்கள் மூலம் 151 மனித ஆற்றல்கள் பெற்று துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின் மன்ற தீர்மானம் எண் 246 நாள் 28.05.2021 ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதன் பேரில் சுய உதவி குழுக்கள் மூலம் மனித ஆற்றல்கள் பெறப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | வார்டு எண் | திடக்கழிவு மேலான்மை குழுக்கள் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 37 | அன்பு சுய உதவி குழு | 19 |
| 2 | 38 | குறிஞ்சி சுயஉதவிகுழு | 22 |
| 3 | 39 | பசுமை சுயஉதவிகுழு | 20 |
| 4 | 65 | செம்மலர் சுயஉதவி குழு | 20 |
| 5 | 44 | ஸ்வதிக் சுயஉதவிகுழு | 16 |
| 6 | | நிலா சுயஉதவி குழு | 17 |
| 7 | | வெண்ணிலா சுயஉதவி குழு | 21 |
| 8 | 37,38,63 | ஸ்ரீமகாத்மா காந்தி சுயஉதவி குழு | 16 |
| | | கூடுதல் | 151 |

இந்நிலையில் எதிர்வரும் நிதியாண்டிற்கு ( 2022–2023) மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள 151 எண்ணிக்கையிலான தற்காலிக தூய்மைப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

இவ்வாறு பணி அமர்த்துவதால் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியாளர்களின் எண்ணிக்கை | வேலை நாட்கள் | மொத்த மனித வேலை நாட்கள் | நாள் 1க்கு நபர் 1க்கு ஊதியம் ரூ. | ஊதியம் கலம் (4X5) ரூ. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13 % (கலம் 6X 13% நிர்வாக பங்கு தொகை | ESI நிர்வாக பங்கு தொகை (கலம் 6X3.25%) | மொத்த ஊதியம் கலம் 6+7+8 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 151 | 91 | 13741 | 461 | 6334601 | 823498 | 205875 | 7363974 |

மேற்கண்ட அட்டவணையில் கலம் எண் 9ல் கண்டுள்ளவாறு 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாத காலத்திற்கு 151 எண்ணிக்கையில் தற்காலிக தூய்மைப்பணியாளர்களை ஈடுபடுத்த ஆகும் செலவின தொகை ரூ. 7363974/– ஆக கணக்கிடப்பட்டுள்ளது

திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழு மூலம் பணியாளர்கள் பணி நீட்டிப்பு செய்தும் , இதற்கான உத்தேச செலவினம் ஊதியமாக ரூ. 7363974/– க்கு மாமன்ற அனுமதி வேண்டியும் பொருள் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அ.கு:– 1. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி 01.04.2022 முதல் 30.06.2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்ய அனுமதி வழங்கலாம்

2. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினதொகை ரூ. 7363974/– க்கு அனுமதி வழங்கலாம்.

3. மேற்கண்ட செலவின தொகையினை இம்மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கை (22– 23) க்கு கணக்கு தலைப்பு எண் 2101010ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

எச்1/ 3776 /2021(பொன்)

**தீர்மானம் எண்: 54 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள்:29

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I –ற்குட்பட்ட 3 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங் கள், மற்றும் 10 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்களை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 592, நாள் 24.12.2020 ன் படி **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்**, திருச்சி நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் கடந்த 01.01.2021 முதல் இயக்கி பராமரித் து வருகிறது . இந்நிலையில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 69, நாள். 25.01.2022ன் படி இந்நிறுவனம் இரண்டாமாண்டு முதல் மூன்று மாதங்களுக்கான இயக்கம் மற்றும் பராமரிப்பு காலம் (01.01.2022 முதல் 31.03.2022 வரை) 31.03.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளது. தற்போது மேலும் 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையின் விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கழிவுநீர் உந்து நிலையங்களின் வகை | கழிவுநீர் உந்து நிலையங்களின் விபரம் | தற்போது வழங்கப்பட்டு வரும் இரண்டாமாண்டு இயக்கம் மற்றும் பராமரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் | 01.04.2022 முதல் 31.12.2022 வரை 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த செலவீனத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 7 |
| 1 | உயர்மின்னழுத்த கழிவு நீர் உந்து நிலையம் | 1.வாசுதேவன் தெரு (SPS–3)<br>2.வெனீஸ் நகர் (பிளாக் – I)<br>3.மேல்சிந்தாமணி (NRAP) | 70,895/- | 3 X 9 X 70,895 = 19,14,165/- |
| 2 | குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் | 1.மேலூர் சாலை (SPS –1)<br>2.அம்மா மண்டபம் ரோடு (SPS –1A)<br>3. மேலூர் ரோடு (Old)<br>4.டிரைனேஜ் தெரு(SPS–2)<br>5.கொண்டயம் பேட்டை (SPS3–B2)<br>6.அகிலாண்டேஸ்வரி நகர் (SPS–A)<br>7.லட்சுமி நாராயணன் நகர்<br>8.பெரியார் நகர்<br>9.ஶ்ரீராம் நகர்<br>10.திம்மராய சமுத்திரம் | 41,030/- | 10 X 9 X 41,030 = 36,92,700/- |
| | | | **மொத்தம்** | **56,06,865/-** |

மேற்படி நிறுவனத்திற்கு 01.04.2022 முதல் 31.12.2022 வரை (இரண்டாம் ஆண்டுக்கான) ஒன்பது மாதங்களுக்கு பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்ய வும், அதற்காகும் மொத்த செலவினத் தொகை ரூ . **56,06,865/-** க்கு அனுமதிகோரி மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்
2. மேற்படி 3 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம், 10 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்களையும் **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்** திருச்சி நிறுவனத்திற்கு ஒன்பது மாத காலத்திற்கு (01.04.2022 முதல் 31.12.2022 வரை) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய அனுமதியளிக்கலாம். (இரண்டாமாண்டு)
3. இப்பணிக்காகும் மொத்த செலவினத்தொகை ரூ. **56,06,865/-**ஐ 2022–23 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கழிவுநீர் அகற்றல் – பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.350.00 இலட்சத்திலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்

இ6/5834/2020 (மையம்)

**தீர்மானம் எண்: 55 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள்:30

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , வார்டு குழு அலுவலகம் Vற்குட்பட்ட 2 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள் , 3 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 2 எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 592, நாள் 24.12.2020 ன் படி **மெசர்ஸ். பவர் எலக்ட்ரிகல் ஓர்க்ஸ், திருச்சி** நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் கடந்த 01.01.2021 முதல் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 24, நாள். 25.01.2022ன் படி இந்நிறுவனம் இரண்டாமாண்டு முதல் மூன்று மாதங்களு க்கான இயக்கம் மற்றும் பராமரிப்பு காலம் (01.01.2022 முதல் 31.03.2022 வரை) 31.03.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளது. தற்போது மேலும் 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையின் விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது

| வ. எண் | கழிவுநீர் உந்து நிலையங்களின் வகை | கழிவுநீர் உந்து நிலையங்களின் விபரம் | தற்போது வழங்கப்பட்டு வரும் இரண்டாமாண்டு இயக்கம் மற்றும் பராமரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் | 01.04.2022 முதல் 31.12.2022 வரை 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த செலவீனத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 7 |
| 1 | உயர்மின்னழுத்த கழிவு நீர் உந்து நிலையம் | 1.சாமிநாத சாஸ்திரி ரோடு(பிளாக்– VI)<br>2.வயலூர் ரோடு (பிளாக் – IV) | 70,884/- | 2 X 9 X 70,884 = 12,75,912/- |
| 2 | குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் | 1.உறையூர் பனிக்கன் தெரு (NRAP)<br>2. பனிக்கன் தெரு (Old)<br>3. கோணக்கரை | 41,052/- | 3 X 9 X 41,052 = 11,08,404/- |
| 3 | சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் | 1.அம்மையப்பன் நகர் (உய்யகொண்டான் ஆறு அருகில்)<br>2. ஆழ்வார் தோப்பு | 17,644/- | 2 X 9 X 17,644 = 3,17,592/- |
| | | | **மொத்தம்** | **27,01,908/-** |

மேற்படி நிறுவனத்திற்கு 01.04.2022 முதல் 31.12.2022 வரை (இரண்டாம் ஆண்டுக்கான) ஒன்பது மா தங்களுக்கு பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்ய வும் அதற்காகும் மொத்த செலவினத்தொகை ரூ.**27,01,908/-**க்கு அனுமதி கோரி மன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்
2. மேற்படி 2 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம், 3 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் 2 எண்கள் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களையும் **மெசர்ஸ். பவர் எலக்ட்ரிகல் ஓர்க்ஸ், திருச்சி** நிறுவனத்திற்கு ஒன்பது மாத காலத்திற்கு (01.04.2022 முதல் 31.12.2022) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய அனுமதியளிக்கலாம். (இரண்டாமாண்டு)
3. இப்பணிக்காகும் மொத்த செலவினத்தொகை ரூ.**27,01,908/-** ஐ 2022-23 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கழிவுநீர் அகற்றல் பணிகள்– பராமரிப்பு செலவினங்கள் (2305010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.350.00 இலட்சத்திலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்

**இ6/5835/2020 (மையம்)**

**தீர்மானம் எண்: 56 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:31

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் II மற்றும் வார்டு குழு அலுவலகம் III ற்குட்பட்ட 2 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள் , 2 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 1 எண்கள் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 592, நாள் 24.12.2020 ன் படி **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல்ஸ், திருச்சி** நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் கடந்த 01.01.2021 முதல் இயக்கி பராமரித்து வருகிறது . இந்நிலையில் தனி அலு வலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 25, நாள். 25.01.2022ன் படி இந்நிறுவனம் இரண்டாமாண்டு முதல் மூன்று மாதங்களுக்கான இயக்கம் மற்றும் பராமரிப்பு காலம் (01.01.2022 முதல் 31.03.2022 வரை) 31.03.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளது . தற்போது மேலும் 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையின் விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கழிவுநீர் உந்து நிலையங்களின் வகை | கழிவுநீர் உந்து நிலையங்களின் விபரம் | தற்போது வழங்கப்பட்டு வரும் இரண்டாமாண்டு இயக்கம் மற்றும் பராமரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் | 01.04.2022 முதல் 31.12.2022 வரை 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த செலவீனத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 7 |
| 1 | உயர்மின்னழுத்த கழிவு நீர் உந்து நிலையம் | 1.சங்கிலியாண்ட புரம் மணல்வாரித்துறை (GPRS– 1)<br>2.தஞ்சாவூர் ரோடு (பிளாக் – II) | 70,895/- | 2 X 9 X 70,895 = 12,76,110/- |
| 2 | குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் | 1.வரகனேரி பெரியார் நகர் (LT)<br>2. ஜி கார்னர்(GRPS–2) | 41,030/- | 2 X 9 X 41,030 = 7,38,540/- |
| 3 | சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் | 1.வசந்த் நகர் | 17,655/- | 1 X 9 X 17,655 = 1,58,895/- |
| | | | **மொத்தம்** | **21,73,545/-** |

மேற்படி நிறுவனத்தி ற்கு 01.04.2022 முதல் 31.12.2022 வரை (இரண்டாம் ஆண்டு ) ஒன்பது மாதங்களுக்கு பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்ய வும் அதற்காகும் மொத்த செலவினத் தொகை ரூ .**21,73,545/-**க்கு அனுமதி கோரி மன் ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்
2. மேற்படி 2 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம், 2 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் 1 எண் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களையும் **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல், திருச்சி** நிறுவனத்திற்கு ஒன்பது மாதகாலத்திற்கு (01.04.2022 முதல் 31.12.2022) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய அனுமதியளிக்கலாம். (இரண்டாமாண்டு)
3. இப்பணிக்காகும் மொத்த செலவினத்தொகை ரூ. **21,73,545/–** ஐ 2022–23 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கழிவுநீர் அகற்றல் பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.350.00 இலட்சத்திலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்

**இ6/5836/2020 (மையம்)**

**தீர்மானம் எண்: 57 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள்:32

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் II மற்றும் வார்டு குழு அலுவலகம் IVற்குட்பட்ட 3 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள் , 3 எண்கள் கு றைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 1 எண் சாலையோர கழிவு நீர் உந்து நிலையங்களை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 592, நாள் 24.12.2020ன் படி மெசர்ஸ். பவர் எலக்ட்ரிகல் ஓர்க்ஸ் , திருச்சி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் கட ந்த 01.01.2021 முதல் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது . இந்நிலையில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 26, நாள். 25.01.2022ன் படி இந்நிறுவனம் இரண்டாமாண்டு முதல் மூன்று மாதங்களுக்கான இயக்கம் மற்றும் பராமரிப்பு காலம் (01.01.2022 முதல் 31.03.2022 வரை) 31.03.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளது .. தற்போது மேலும் 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையின் விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கழிவுநீர் உந்து நிலையங்களின் வகை | கழிவுநீர் உந்து நிலையங்களின் விபரம் | தற்போது வழங்கப்பட்டு வரும் இரண்டாமாண்டு இயக்கம் மற்றும் பராமரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் | 01.04.2022 முதல் 31.12.2022 வரை 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த செலவீனத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 7 |
| 1 | உயர் மின்னழுத்த கழிவு நீர் உந்து நிலையம் | 1.அண்ணா ஸ்டேடியம்(MPS -2)<br>2.ஒத்தக்கடை (MPS -1)<br>3. பீமநகர் (பிளாக்V) | 70,884/- | 3 X 9 X 70,884 = 19,13,868/- |
| 2 | குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் | 1.கல்லுக்குழி செங்குளம் காலனி (Block –7)<br>2. பெரிய மிளகுபாறை (SPS)<br>3. ராஜா காலனி | 41,052/- | 3 X 9 X 41,052 = 11,08,404/- |
| 3 | சாலையோர கழிவு நீர் உந்து நிலையம் | 1.ஸ்டேட் பேங்க் காலனி | 17,644/- | 1 X 9 X 17,644 = 1,58,796/- |
| மொத்தம் | | | | **31,81,068/-** |

மேற்படி நிறுவனத்திற்கு 01.04.2022 முதல் 31.12.2022 வரை (இரண்டாம் ஆண்டு ) ஒன்பது மாதங்களுக்கு பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்ய வும் அதற்காகும் மொத்த செலவினத் தொகை ரூ .**31,81,068/-**க்கு அனுமதி கோரி மன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்
2. மேற்படி 3 எண்கள் உயர்மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம், 3 எண்கள் குறைந்த மின்னழுத்த கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் 1 எண்கள் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களையும் இயக்கி பராமரிப்பதற்கு மெசர்ஸ். பவர் எலக்ட்ரிகல் ஓர்க்ஸ், திருச்சி நிறுவனத்திற்கு ஒன்பது மாதகாலத்திற்கு (01.04.2022 முதல் 31.12.2022) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய அனுமதியளிக்கலாம். (இரண்டாமாண்டு)
3. இப்பணிக்காகும் மொத்த செலவினத்தொகை ரூ. **31,81,068/– ஐ** 2022-23 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கழிவுநீர் அகற்றல் பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.350.00 இலட்சத்திலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்

**இ6/5837/2020 (மையம்)**

**தீர்மானம் எண்: 58 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள்:33

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் I–ற்குட்பட்ட 23 சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களை தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 592, நாள் 24.12.2020ன் படி **மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்** , திருச்சி நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் கடந்த 01.01.2021 முதல் இயக் கி பராமரிக்கப்பட்டு வருகிறது . இந்நிலையில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண் 704, நாள் 31.12.2021 ன் படி இந்நிறுவனத்தின் இரண்டாமாண்டு முதல் மூன்று மாதங்களுக்கான இயக்கம் மற்றும் பராமரிப்பு காலம் (01.01.2022 முதல் 31.03.2022 வரை) 31.03.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளது. தற்போது மேலும் 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையின் விபரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது

| வ. எண் | கழிவுநீர் உந்து நிலையங்களின் வகை | கழிவுநீர் உந்து நிலையங்களின் விபரம் | தற்போது வழங்கப்பட்டு வரும் இரண்டாமாண்டு இயக்கம் மற்றும் பராமரிப்புத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் | 01.04.2022 முதல் 31.12.2022 வரை 9 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த செலவீனத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 7 |
| 1 | சாலையோர கழிவுநீர் உந்து நிலையம் | 1.ராஜாஜி சாலை<br>2.ஸ்ரீரங்கம் வடக்கு வாசல்<br>3.மேலூர் ரோடு<br>4.அம்மா மண்டபம் ரோடு<br>5.T.V.கோவில் வடக்கு விபூதி பிரகாரம்,<br>6.வீரேஸ்வரம் அணுகு சாலை<br>7.கொள்ளிடம் ரிவர் பேங்க்<br>8.ட்ரங்க் ரோடு<br>9.ஸ்ரீநகர்<br>10.பேங்கர்ஸ் காலனி<br>11.அருள் முருகன் கார்டன்<br>12.ஆண்டவன் கல்லூரி<br>13.பர்மா காலனி<br>14.கந்தன் நகர்.<br>15.ஒத்த தெரு<br>16.மார்க்கெட் ரோடு<br>17.பெரியார் நகர்<br>18அடையவளஞ்சான் தெரு.<br>19.நெல்சன் ரோடு<br>20,கணபதி தோட்டம் மேலூர்<br>21.மேலூர்<br>22.நைட் சாயில் ரோடு<br>23.தாகூர் தெரு | 17,655/- | 23 X 09 X 17,655=<br>36,54,585/- |
| | | | **மொத்தம்** | **36,54,585/-** |

மேற்படி நிறுவனத்திற்கு 01.04.2022 முதல் 31.12.2022 வரை (இரண்டாம் ஆண்டுக்கான ) ஒன்பது மாதங் களுக்கு பராமரிப்பு காலத்தை நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் மொத்த செலவினத் தொகை ரூ. **36,54,585/-**க்கு அனுமதி கோரி மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. ஒப்புதல் அளிக்கலாம்
2. மேற்படி 23 எண்கள் சாலையோர கழிவுநீர் உந்து நிலையங்களையும் **மெசர்ஸ்.பாலாஜி எலக்ட்ரிகல்ஸ்** திருச்சி நிறுவனத்திற்கு ஒன்பது மாத காலத்திற்கு (01.04.2022 முதல் 31.12.2022 வரை) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய அனுமதியளிக்கலாம். (இரண்டாமாண்டு)
3. இப்பணிக்காகும் மொத்த செலவினத்தொகை ரூ. **36,54,585/-** ஐ 2022–23 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கழிவுநீர் அகற்றல் பணிகள் பராமரிப்பு செலவினங்கள் (2305010) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.350.00 இலட்சத்திலிருந்து இப்பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகுமேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்

**இ6/5838/2020 (மையம்)**

**தீர்மானம் எண்: 59 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள்:34

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் 32 எண்ணிக்கை பரப்புரையாளர்கள் , 5 எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒரு ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்களை வெளிக்கொணர்வு முறையில் வழங்கும் பணியினை ரூ.80.06 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொ ள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் .09/2021-2022 இன் வாயிலாக 20.04.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் , இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் நேரிலும், ஒரு ஒப்பந்தப்புள்ளி இணையதளத்தின் மூலமாகவும் பெறப்பட்டது . மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப உறை பிரித்து சரிபார்க்கப்பட்டதில் M/s Five Star Man Power & Infra Services, சென்னை நிறுவனம் மட்டுமே தொழில்நுட்ப தகுதி பெற்றிருந்தது. எனவே, தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள M/s Five Star Man Power & Infra Services, சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி உறையைப் பிரிக்க ஆணையர் அவர்கள் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, விலைப்புள்ளி உறை பிரிக்கப்பட்டதில் M/s Five Star Man Power & Infra Services, சென்னை நிறுவனம் நிர்ணயம் செய்யப்பட்ட 5.00 சதவீதம் சேவைக் கட்டணத்திலிருந்து 0.10 சதவீதம் குறைந்து 4.90 சதவீதம் சேவைக் கட்டணமாக விலைப்புள்ளியை அளித்திருந்தது.

இந்நிலையில், மேலும் விலைகுறைப்பு செய்யுமாறு மேற்படி நிறுவனத்திற்கு கடிதம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து , சேவைக் கட்டணத்தினை 0.25 சதவீதம் குறைத்து 4.75 சதவீதத்திற்கு இப்பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் அளி த்துள்ளது. எனவே, நிர்ணயம் செய்யப்பட்ட 5.00 சதவீதம் சேவைக் கட்டணத்திலிருந்து 0.25 சதவீதம் குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள M/s Five Star Man Power & Infra Services, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் , வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. நிர்ணயம் செய்யப்பட்ட 5.00 சதவீதம் சேவைக் கட்டணத்திலிருந்து 0.25 சதவீதம் குறைந்த விலைப்புள்ளியை அளித்துள்ள M/s Five Star Man Power & Infra Services, சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.

**(கோப்பு எண். எச்1/3283/2022(மையம்)**

**தீர்மானம் எண்: 60 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:35

அரசாணை (நிலை) எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 30.03.2022. மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந .க.எண். 40032/2012/ஆர்1. நாள்: 01.04.2022ல் சொத்துவரி யினை பொது சொத்துவரி சீராய்வு மூலம் 01.04.2022 முதல் மாற்றி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது . மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டது. 12.04.2022ம் தேதிய மாமன்ற தீர்மானம் எண் .09ல் பார்வையிட்டு பதிவு செய்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

15 ஆவது மத்திய நிதி ஆணையம் , 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation ) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும் , மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது . மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள். 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை)எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை)எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள். 19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு , சொத்து வரி /காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி /காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு சந்தை மதிப்பு குறியீடு , பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாமலும், உள்ளாட்சி அமைப்புகளில் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமலும் , மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெறுமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது

மாநகரங்கள் மற்றும் நகரங்களில் நிர்வாகச் செலவினம் , பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப பலமடங்கு உயர்ந்துள்ளது . மேலும் மாநகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் , 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டடங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சி, சொத்து வரி /காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி /காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவி ன் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்யலாம் . மாநகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக் கு அவற்றின் அமைவிடம் , கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகளின் அடிப்படையில் சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை)எண். 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள். 30.03.2022ல் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பீடு நிர்ணயம் செய்யலாம் என அறிவுரை வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## <u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள் (**Residential Building**)

| பரப்பளவு(ச.அடி) | உயர்வு செய்வதற்கான காரணி | உயர்வு சதவீதம் |
|---|---|---|
| < = 600 | 1.25 | 25% |
| 601 – 1200 | 1.5 | 50% |
| 1201 – 1800 | 1.75 | 75% |
| > 1800 | 2 | 100% |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (**Non–Residential Building**)

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கான காரணி | உயர்வு சதவீதம் |
|---|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 | 75% |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 | 100% |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 | 75% |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழகண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
5. வணிக நிறுவனங்களுக்கு / வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6. தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட சொத்துவரி சீராய்வு தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடிதத்தின் வாயிலாக தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புக்குட்பட்ட பொதுமக்களிடையே ஆலோசணைகள் மற்றும் ஆட்சே பணைகள் கோரிட தெரிவிக்கப்பட்டதின்படி, 13.04.2022ம் நாளன்று தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் நலச்சங்கங்களிடமிருந்து சுமார் 477 ஆட்சேபணை மனுக்கள் பெறப்பட்டுள்ளது . அவ்வாறு பெறப்பட்ட ஆட்சேபணை மனுக்களுக்கு கீழ்கண்டவாறு விபரங்கள் தெரிவிக்கலாம்.

| மனுவில் குறிபிட்டுள்ள பகுதியின் பெயர் | கோரிக்கை விபரம் | பெறப்பட்ட அனைத்து ஆட்சேபனை மனுக்களுக்கான பதில் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| .1. தென்னூர் பகுதி மக்கள்.<br><br>2 ஸ்ரீரங்கம் கொள்ளிடக்கரை பகுதி மக்கள்<br><br>3. மேலகல்கண்டார் கோட்டை, திருவெறும்பூர், காட்டூர், எல்லக்குடி, கெம்ஸ்டவுன், திருவானைக் கோவில்பகுதி மக்கள். | 1. சொத்துவரி உயர்வு சதவீதம் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.<br>2. 75 மற்றும் 100 சதவீதம் உயர்வு செய்யும் நேர்வுகளில் 50சதவீதம் மட்டும் உயர்வு செய்யப்பட வேண்டும் என தெரிவித்துள்ளனர். | 15 ஆவது மத்திய நிதி ஆணையம் , 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு , மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i .e. Rate of Taxation ) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி |

| | | |
|---|---|---|
| 4. கைலாஷ்நகர், அண்ணாசாலை,<br><br>5. திருவாணைக் கோவில் கொண்டையம் பேட்டை.<br><br>6. காட்டூர் அம்மன் நகர் கிழக்கு விஸ்தரிப்பு<br><br>7. கே.கே.நகர் மாதவன் சாலை பகுதி மக்கள். | 3. அனைத்து தரப்பினருக்கும் ஒரேமாதிரியான வரி சீராய்வு செய்யப்படவேண்டும் என தெரிவித்துள்ளனர். சொத்துவரி உயர்வு சதவீதம் 25 சதவீதம் மட்டும் உயர்வு செய்திட தொவித்துள்ளனர்.<br>4. அடிப்படை வசதிகளை சரிவர ஏற்படுத்தாத நிலையில் சொத்துவரி உயர்வு செய்வதனை மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என தெரிவித்துள்ளனர்.<br><br>5. சொத்துவரி பொது சீராய்வு தொடர்பான விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என தெரிவித்துள்ளனர்.<br><br>6. அடிப்படை வசதிகளை செய்து முடித்தபின்னர் சொத்துவரி சீராய்வினை செயல்படுத்திட வேண்டும் என தெரிவித்துள்ளார்.<br><br>7. ஒரே முகவரியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ஒரே ஒரு வரி விதிப்பு செய்யப்படவேண்டும் என தெரிவித்துள்ளார். | அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 19.07.2018 மற்றும் அரசாணை (நிலை)எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை , நாள். 26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி / காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 19.11.2019-ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு , சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழி காட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது . மேலும், இக்குழுவானது சொத்து வரி /காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு சந்தை மதிப்பு குறியீடு , பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு , மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து பொரு ளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாமலும் , உள்ளாட்சி அமைப்புகளில் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமலும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெறுமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.<br>அதன்படி, சொத்துவரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை)எண். 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் . 30.03.2022ல் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பீடு நிர்ணயம் செய்யலாம் என அறிவுரை வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.<br><br>குடியிருப்பு கட்டடங்கள் (**Residential Building):**<br><br>பரப்பளவு(ச.அடி) / உயர்வு செய்வதற்கான காரணி / உயர்வு சதவீதம்:<br>< = 600 / 1.25 / 25%<br>601 – 1200 / 1.5 / 50%<br>1201 – 1800 / 1.75 / 75%<br>> 1800 / 2 / 100% |

| | | |
|---|---|---|
| | | மேற்கண்டுள்ள அட்டவணையானது பொது மக்களின் வாழ்க்கைத்தரத்தினை அடிப்படையாகக் கொண்டு சதுர அடி பரப்பளவுக்கு ஏற்றவாறு சொத்துவரி உயர்வு சதவீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br>மேலும், சொத்துவரி சீராய்வானது ஒவ்வொரு ஐந்தாண்டுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படுதல் வேண்டும் இருப்பினும் தற்போது சொத்துவரி சீராய்வானது 14 ஆண்டுகளுக்கு பிறகே உயர்வு செய்யப்பட்டுள்ளது.<br>மாநகராட்சி நிர்வாகம் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடவும், சுகாதார கட்டமைப்பினை உருவாக்கிடவும் மேற்கண்ட சொத்துவரி உயர்வானது மி கவும் அவசியமாகிறது என்ற விபரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கலாம். சொத்துவரி உயர்வு தொடர்பான விவரங்கள் திருச்சிராப்பள்ளி மாநரகாட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>ஒரே முகவரியில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு ஒரே ஒரு வரிவிதிப்பு மட்டும் செய்ய அரசாணை மற்றும் மாநகராட்சி விதிகளில் வழிவகை இல்லை என்ற விபரம் தெரிவிக்கலாம் |

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்

மேலும், தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய் யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள் , தெருக்கள், சந்துக்கள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் மாநகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம் , மாநகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஆகியவற்றை கரு த்தில் கொண்டும் , பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும் மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும் , திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 அத்தியாயம் 5 பிரிவு 125-ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி / காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண் 09, நாள்.12.04.2022ன் தீர்மானத்தினை உறுதி செய்திட பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:**

மேற்படி அரசாணை, அரசின் வழிகாட்டுதல்கள் மற்றும் மாமன்றத் தீர்மானம் எண். 09, நாள் 12.04.2022ல் தெரிவிக்கப்பட்டவற்றை உறுதி செய்து கீழ்கண்டுள்ள அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கலாம்.

1. 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2. 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3. 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4. 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5. வணிக நிறுவனங்களுக்கு / வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6. தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7. காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8. ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி/காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.
9. பொதுசொத்துவரி சீராய்வு தொடர்பாக வரப்பெற்றுள்ள ஆட்சேபனை மனுக்களில் தெரிவித்துள்ள விபரங்களை விவாதம் செய்து பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களை மனுதாரருக்கு தெரிவிக்க மாமன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 4229/2022/அ1/மையம்)

**தீர்மானம் எண்: 61 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் : 36**

அரசாணை (நிலை) எண்4, தகவல் தொழில்நுட்பத் துறை நாள் .25.01.2022ல் தமிழ்நாடு தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு கொள்கை 2022 –ஐ அமல்படுத்துவது தொடர்பாகவும், புதிய கட்டண விகிதங்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை, மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** பார்வையிட்டுப் பதிவு செய்யலாம்.

**எப்1/9779/2020 (மையம்)**

**தீர்மானம் எண்: 62 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## ABSTRACT

Information Technology Department – Indian Telegraph Right of Way (RoW) Rules, 2016, notified by Government of India – Implementation in the State of Tamil Nadu - Tamil Nadu Telecom Infrastructure Policy, 2022 – Approved - Orders - Issued.

---

**INFORMATION TECHNOLOGY (E1) DEPARTMENT**

**G.O.(Ms). No. 4** **Dated : 25.01.2022**
**பிலவ, தை – 12**
**திருவள்ளுவர் ஆண்டு–2053**

**Read:**

1. G.O.(Ms.) No.7, Information Technology Department, dated 12.02.2001.
2. G.O.(Ms.) No.2, Information Technology Department, dated 01.04.2002.
3. Letter No.237/IT/2002-7, Information Technology Department, dated 18.09.2002.
4. Indian Telegraph Right of Way Rules, 2016 notified by the Government of India in Gazette Notification No. GSR 1070(E), dated 15.11.2016.
5. G.O.(Ms.) No.1, Information Technology (B4) Department, dated 21.02.2018.
6. Indian Telegraph Right of Way (Amendment) Rules, 2021 notified by the Government of India in Gazette Notification No. GSR 749(E), dated 21.10.2021.

*****

**ORDER:**

Telecom industry is pivotal in transforming the nation into a digital economy. Telecom Infrastructure plays a vital role in the world of communication. There is a tremendous upsurge in communication and broadband traffic and the usage of internet has increased multifold. This has necessitated new Telecom Infrastructure as well as upgradation of existing Telecom Infrastructure on a faster pace.

2. To establish Telecom Infrastructure, Telecom Infrastructure Providers (TSPs) need to apply for Right of Way (RoW) to the Competent Authorities and permissions were granted with certain conditions to establish, operate and maintain underground and overground telecommunication network such as Optical Fibre Cables, Mobile Towers.

3. In the Government Order 1st read above, consolidated guidelines were issued specifying the terms and conditions for the grant of centralised permission for the use of Right of Way (RoW) by any private or public sector applicant proposing to lay Optical Fibre Cables (OFCs) in Tamil Nadu. As per the Guidelines, the applicants (TSPs) had to pay annual track rent to the respective local bodies at the rates fixed in G.O.(Ms.) No.172, Revenue Department, dated 28.03.2000.

4. In the Government Order 2nd read above, Guidelines have been issued for installation of Base Stations consisting of Tower, Equipment Room and Generator Room, on roof-top or on the ground of premises and buildings belonging to Government of Tamil Nadu / Quasi Government / Public Sector Undertakings / Local Bodies / Private Lands and buildings. The guidelines permit to charge appropriate rent from the TSPs. In the Government letter 3rd read above, certain exemptions from set-back rules were granted to TSPs.

..2

5. In the Gazette Notification 4th read above, the Department of Telecommunications, Ministry of Communications, Government of India had notified the Indian Telegraph Right of Way Rules, 2016 to regulate Underground Telegraph Infrastructure (Optical Fibre Cable) and Overground Telegraph Infrastructure (Mobile Towers).

6. In the Government Order 5th read above, enabling orders were issued by Government of Tamil Nadu for implementing the above Rules in the State for regulating the Underground/Overground Telecom Infrastructure. In the said G.O., it has been mentioned that the Principal Secretary to Government, Information Technology Department shall be the Dispute Resolution Officer, under the provisions of Indian Telegraph Right of Way Rules, 2016 and detailed guidelines will be issued by the Information Technology Department for the successful implementation of the Indian Telegraph Right of Way Rules, 2016.

7. In the Gazette Notification 6th read above, the Department of Telecommunications, Government of India has notified the Indian Telegraph Right of Way (Amendment) Rules, 2021 to regulate Underground Telegraph Infrastructure (Optical Fibre Cable) and Overground Telegraph Infrastructure (Mobile Towers).

8. Accordingly, the Government, after careful consideration and in consultation with other Departments, has formulated the Tamil Nadu Telecom Infrastructure Policy, 2022 in consonance with Indian Telegraph Right of Way Rules 2016. The objectives of the Policy are to develop a robust and secure State-of-the-art Telecommunication Network to provide seamless coverage especially in rural and remote areas and to provide seamless connectivity to the citizens by easing the process of application, approval and installation of telecom infrastructure.

9. The Government in Information Technology Department hereby issues the Tamil Nadu Telecom Infrastructure Policy, 2022 applicable to all existing and future Telecom Infrastructure, streamline the process of applications and granting of permission for installation of Mobile Towers, laying of Optical Fibre Cable and other Telecom Infrastructure in a time-bound manner. This will -

- increase mobile telecom penetration in rural areas,
- provide reliable, affordable, high-quality telecommunication and internet services to the citizens,
- provide high speed and high-quality broadband access to the rural areas,
- encourage adoption of green and citizen friendly telecom sites.

10. The summary of features / provisions of the Policy are stated below (refer to the policy document for exact provisions):

- The Principal Secretary to Government, Information Technology Department shall function as **Dispute Resolution Officer,** under the provisions of Indian Telegraph Right of Way Rules, 2016.

- **Appropriate Authority** is the State Government, local authority or such authority, body, company or institution incorporated or established by the State Government, in respect of property, under, over, along, across, in or upon which Underground or Overground Telegraph Infrastructure, is to be established or maintained, vested in, or under the control or management of such Appropriate Authority.

..3

- **Nodal Officer** is the officer designated by every Appropriate Authority including local bodies for processing the application under this policy and sending the recommendations to the District Nodal Officer.
- In respect of Greater Chennai Corporation, the Commissioner of Corporation and in respect of Districts other than Chennai, the District Collectors shall be the **District Nodal Officers** and shall be solely empowered to issue the permission in their respective jurisdictions under this policy based on recommendations of the **Nodal Officers** under the geographical jurisdiction of the District Nodal Officer.
- **Charges/fee** to be levied for giving RoW permission have been fixed as follows:
    - For laying Underground Telegraph Infrastructure, every application under sub-section of (1) of Section 7 of this Policy shall be accompanied by a non-refundable fee of **Rs.1000/- per Kilometre** or part thereof exclusive of taxes.
    - For establishing Mobile Tower (Overground Telegraph Infrastructure), every application under sub-section of (1) of Section 11 of this Policy shall be accompanied by a one-time non-refundable fee **Rs.10,000/- per Tower**.
    - For establishing Overground Telegraph/Optical Fibre Cable line, every application under sub-section of (1) of Section 11 of this Policy, shall be accompanied by a one-time non-refundable fee of **Rs.1000/- per Kilometre** or part thereof exclusive of taxes.
    - In case of each Wi-Fi antenna or Micro Cell unit with utility box attached to Micro Cell installed on any public land or building including Bus, Shelters, Light Pole, Public Places or other Government premises and Cell-on-Wheels (CoW), a **one-time fee of Rs.1000/-** exclusive of taxes per installation shall be payable.
    - No fee and charges shall be recovered from the Government Departments for establishing Telecommunication System including towers/poles for their use.
    - In line with the Indian Telegraph Right of Way Rules, 2016, no track rent (one-time or annually) shall be charged by any District Nodal Officer or Appropriate Authority for grant of any permission under any existing Government orders issued by Revenue & Disaster Management, Rural Development & Panchayat Raj and Municipal Administration & Water Supply departments.
- **Application Process** and **Deemed Clearance**:
    - The District Nodal Officer shall, within a period not exceeding 60 calendar days from the date of application, grant permission (or) reject the application for specific reasons/deficiencies to be recorded in writing.
    - No application shall be rejected unless the applicant has been given an opportunity of being heard on the reasons/deficiencies for such rejection.
    - RoW permission shall be deemed to have been granted if the District Nodal Officer fails to grant permission or reject the application within 60 calendar days of the date of application.

..4

-4-

- In case of rejection within 60 calendar days, the applicant has to correct the deficiencies and resubmit the application at the earliest. If the resubmitted application is not approved within 30 calendar days from the date of resubmission, permission shall be deemed to have been granted. The deemed permission shall be communicated to the applicant electronically from single window immediately.
- In case of resubmission of the same application by the same applicant with desired corrections to address / mitigate the reasons/deficiencies pointed out in the first rejection, the application cannot be rejected again for any of new reasons/deficiencies that were not listed in the first rejection. No new fee/charges shall be levied in case of resubmission of application for same Underground Telegraph Infrastructure.
- The provision of deemed approval shall not be applicable for Overground Telegraph Infrastructure established prior to the coming into effect of this policy.

- **Ensuring Public Convenience/safety and Inspections:**
  - It shall be ensured that prior to the commencement of work, measures to mitigate public inconvenience and provisions for public safety are implemented in consonance with various State/Central Acts/Rules.
  - The Appropriate Authority shall have the right to inspect the site at all times without any prior notice to supervise the execution of work to ascertain if the conditions imposed in the grant of permission is being complied with by the applicant.
- **Regularisation of existing telecom infrastructure:**
  - Wherever permissions have already been granted or was deemed to be granted under erstwhile orders, the same shall hold good and no fresh permission will be required under this policy.
  - However, all the existing Telegraph Infrastructure wherein either formal permission has not been issued or deemed to be granted, shall be regularised upon the submission of application in FORM-I and/or FORM-II as annexed to this policy, along with information and documents as specified therein and after the payment of prescribed fee under this policy. Such application shall be submitted within six months of issue of this Policy, after which the said Mobile Towers/Cable or OFC (underground/overground) shall be deemed as unauthorized.
- **State Level and District Level Telecom Committees:**
  - A **State Level Telecom Committee (SLTC)** under the Chairmanship of Chief Secretary, shall be formed to resolve the issues arising due to escalation by the Telecom Infrastructure Company or referred by Dispute Resolution Officer.
  - A **District Level Telecom Committee (DLTC)** under the Chairmanship of District Collector/Commissioner of Greater Chennai Corporation, shall be formed to resolve all issues within a period of thirty calendar days of

..5

initial receipt of reference by the DLTC. The reference may arise due to escalation by the Telecom Infrastructure Company or referred to District Level Telecom Committee by the Dispute Resolution Officer.

11. The Tamil Nadu Telecom Infrastructure Policy, 2022 has been issued with the concurrence of stakeholder departments, i.e., Energy, Environment, Climate Change & Forests, Revenue & Disaster Management, Highways & Minor Ports, Rural Development & Panchayat Raj, Housing & Urban Development, Finance, Law, Municipal Administration & Water Supply and Public Works and Water Resources Departments. The Policy document is annexed with this Order.

12. This order is issued with the concurrence of Finance Department vide its U.O.No.3117/Finance(Industries)/2022 dated 25.01.2022. This Order comes into force with effect from 25.01.2022.

**(By Order of the Governor)**

**NEERAJ MITTAL**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**To**

All Departments of Secretariat, Secretariat, Chennai-600 009.
All Heads of Departments under Departments of Secretariat,
Government of Tamil Nadu.
All Districts Collectors, Government of Tamil Nadu.
The Commissionerate of Municipal Administration,
No. 78, Urban Administrative Building, Santhome High Road,
Chennai – 600 028.
The Director of Rural Development and Panchayat Raj,
Panagal Building, Chennai – 600 015.
The Commissioner, Greater Chennai Corporation,
Ripon Building, Chennai – 600 003.
The Managing Director,
Electronics Corporation of Tamil Nadu Limited (ELCOT),
692, MHU Complex, Anna Salai, Nandanam, Chennai –600 035.
The Director General,
Digital Infrastructure Providers Association (DIPA),
Building No.7, 2nd and 3rd Floor, Bhai Vir Singh Marg, New Delhi – 110 001.
The Deputy Director General (Rural), Office of the Advisor TNLSA,
Department of Telecommunications, Government of India,
III Floor, TNT Complex Building, No. 60 Ethiraj Salai, Chennai – 600 008.
The Chief General Manager, Bharat Sanchar Nigam Limited (BSNL),
No. 16, Greams Road, Chennai – 600 006.
The Cellular Operators Association of India (COAI),
Sector 2, 14, Bhai Vir Singh Marg, Sector 4, Gole Market, New Delhi – 110 001.

**Copy to:**

The Special Personal Assistant to Hon'ble Chief Minister,
Chief Minister's Office, Secretariat, Chennai – 600 009.

..6

The Special Personal Assistant to Hon'ble Minister for Information Technology, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Environment, Climate Change, Youth Welfare and Sports Development, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Finance and Human Resource Management, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Electricity, Prohibition & Excise, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Forests, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Rural Development, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Housing and Urban Development, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Law, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Revenue and Disaster Management, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Public Works (Buildings, Highways and Minor Ports), Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Municipal Administration, Secretariat, Chennai – 600 009.

The Personal Assistant to Hon'ble Minister for Water Resources, Secretariat, Chennai – 600 009.

The Principal Private Secretary to Chief Secretary to Government, Secretariat, Chennai-600009.

The Private Secretary to Principal Secretary to Government, Information Technology Department, Secretariat, Chennai-600 009.

The Information Technology (OP) Department, Secretariat, Chennai-600 009.

The Content Creator/Moderator/Nodal Officer, Information Technology Department, Secretariat, Chennai-600 009.

SF/Sc

// Forwarded / By Order //

25/01/2022

Section Officer.

25/1/22

**பொருள்: 37**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை – 15வது மத்திய நிதி குழு பரிந்துரை நிதி – திருச்சி மாநகரின் காற்றின் தரம் மேம்பாடு மற்றும் திடக்கழிவு மேலாண்மை மேம்பாடுக்கென 2020 – 21 ம் நிதி ஆண்டில் தலா 21.00 கோடி வீதம் ஆக கூடுதல் 42.00 கோடி நிதி பெறப்பட்டுள்ளது.

பெறப்பட்ட நிதியில் 2020 – 21 ம் நிதி ஆண்டில் பின்வரும் அட்டவணை –1ல் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உரிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

**அட்டவணை–1**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு (ரூ. லட்சங்கள்) |
|---|---|---|
| **திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் மேலாண்மை 2020–21** | | |
| 1. | 50 லிட்டர் கொள்ளளவுள்ள (HDPE) கொள்கலன் – 2000 எண்ணிக்கைகள் வாங்குதல் | 21.25 |
| 2. | டம்பர் பிளேசர் வாகனங்களின் அடிப்பட்டையின் மீது 12க.மீ கொள்ளளவுள்ள 8 எண்ணிக்கை டிப்பர் பாடி கட்டுமான பணி மேற்கொள்ளும் பணி | 65.00 |
| 3. | மின்கல வாகனங்கள் – 88 எண்ணிக்கைகள் வாங்குதல் | 195.00 |
| 4. | புதைவடிகால் குழாய் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்தவதற்கு தூர்வாறும் வாகனம் (LCV mounted de–silting Vechicle) – 8 எண்ணிக்கைகள் வாங்குதல். | 120.00 |
| 5. | Skid Steer Loader (பாப்காட்) வாகனம் 3 எண்ணிக்கைகள் வாங்குதல். | 75.00 |
| 6. | நுண்ணுரசெயலாக்க மையம் கட்டும் பணி –8 எண்ணிக்கை | 481.10 |
| 7. | டிராக்டர் டோசர் வாகனம் 3 எண்ணிக்கைகள் வாங்குதல். | 28.50 |
| 8. | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 87.15 |
| 9. | மின்கல வாகனங்களுக்கு மின்னூட்ட நிலையம் 20 இடங்களில் அமைத்தல் | 200.00 |
| 10. | திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு தேவையான 70 எண்ணிக்கைகள் இலகுரக வாகனங்கள் **(LCV)** s.s தகட்டின் மூலம் கட்டுமானப்பணி செய்து வழங்கும் பணி. | 805.00 |
| | **மொத்தம் (அ)** | **2078.00** |
| **காற்றின் தரம் மேம்படுத்துதல் –2020–21** | | |
| 1. | காற்று மாசுபாடு காரணிகள் கண்டறிதல் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் (Source Apportionment & emission Inventory study) குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்பித்திட இந்திய தொழில்நுட்ப கழகம் மெட்ராஸ் சென்னை ( IIT– Madras, Chennai)–க்கான கட்டணம் | 89.00 |
| 2. | திருச்சிராப்பள்ளி மாநகரில் சுற்றுபுற காற்றின் தரத்தை கண்டறிந்து அதன் மூலம் மாநகரில் காற்றின் தரத்தை மேம்படுத்த ஏதுவாக காற்றின் தரம் கண்டறியும் கருவி – 3 எண்ணிக்கை பொருத்தும் பணி. | 540.00 |
| 3. | சாலை ஓரங்களில் குவிந்துள்ள மண் மேடுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதற்கு 4 Wheel drive (4x4) Backhoe Loader vehicle – 1 எண்ணிக்கை வழங்கும் பணி. | 40.00 |
| 4. | சாலை ஓரங்களில் சேகரமாகியுள்ள மண்துகள்ளை அப்புறபடுத்துவதற்கு முன்னதாக, சாலைகளில் நீர் தெளிப்பதற்கு 9000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்தெளிப்பான் வாகனம் (Water sprinkler Vehicle) – 4 எண்ணிக்கைகள் வழங்கும் பணி | 140.00 |
| 5. | சாலையோர திறந்தவெளி மழைநீர் வடிகால் தூர்வாறும் வாகனம் (Truck mounted de–silting Vehicle) – 1 எண்ணிக்கைகள் வழங்கும் பணி. | 37.00 |
| 6. | புதை வடிகால் குழாய்களில் ஏற்படும் அடைப்பினை இயந்திரம் மூலம் சரி செய்வதற்கு தேவையான Super sucker machine வாகனம் –1 எண்ணிக்கை. | 56.50 |
| 7. | தார் சாலையில் பேட்ஜ் ஒர்க் –15 எண்கள் | 1198.50 |
| | **மொத்தம் (ஆ)** | **2101.00** |

மேலும் 15வது மத்திய நிதி குழு 2021 – 22 ம் நிதி ஆண்டில் திருச்சி மாநகரின் காற்றின் தரம் மேம்பாடுக்கென ரூ .11.00 கோடி மற்றும் திடக்கழிவு மேலாண்மை மேம்பாடுக்கென ரூ.22.00 கோடி ஆக கூடுதல் 33.00 கோடி நிதி பெறப்பட்டுள்ளது.

பெறப்பட்ட நிதியில் 2021 – 22 ம் நிதி ஆண்டில் பின்வரும் அட்டவணை–2ல் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உரிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை– 2**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு (ரூ. லட்சங்கள்) |
|---|---|---|
| **திடக்கழிவு மேலாண்மை 2021–22** | | |
| **1.** | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – அரியமங்கலம் குப்பை கிடக்கில் தேக்கமடைந்துள்ள திடக்கழிவுகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் Bio–Mining (Phase–II) திட்டம் மேற்கொள்ளும் பணி | 2540.00 |
| | **மொத்தம் (அ)** | **2540.00** |
| **காற்றின் தரம் மேம்படுத்துதல் 2021–22** | | |
| 1. | திருச்சிராப்பள்ளி மாநகரில் காற்றின் தரத்தை மேம்படுத்துதல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாடு ஏற்படுத்துதல் பணி. | 10.00 |
| 2. | திருச்சிராப்பள்ளி மாநகரில் உள்ள பொதுமக்களுக்கு காற்று மாசுபாட்டை தடுப்பதற்கு துண்டு பிரசுரங்கள்விநியோகித்தல் மற்றும் விளம்பர பதாகைகள் அமைக்கும் பணி. | 10.00 |
| 3. | திருச்சிராப்பள்ளி மாநகரில் காற்று மாசுபாட்டை தடுப்பது குறித்து பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி பட்டறை நடத்தும் பணி. | 10.00 |
| 4. | சாலை ஓரங்களில் குவிந்துள்ள உபரி மண் மற்றும் C&D waste கழிவுகளைஅப்புறப்படுத்துவதற்கு JCB (Backhoe Loader vehicle) – 2 எண்ணிக்கை வழங்கும் பணி | 80.00 |
| 5. | சாலை ஓரங்களில் குவிந்துள்ள உபரி மண் மற்றும் C&D waste கழிவுகளைஅப்புறப்படுத்துவதற்கு 10.5க.மீ கொள்ளளவுள்ள கனரக டிப்பர் வாரிகள் – 4 எண்ணிக்கைகள் வழங்கும் பணி. | 120.00 |
| 6. | திருச்சிராப்பள்ளி மாநகரில் சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதமடைந்த பகுதிகளுக்கு சாலைகளுக்கு பேட்ச் ஒர்க் செய்யும் பணி. | 180.00 |
| 6. | சாலையின் முழு அகலத்திற்கும் தார்தளம் அமைக்கும் பணிகள் | 150.00 |
| 7. | மின்கல வாகனங்களுக்கு மின்னூட்டம் செய்திட 20 இடங்களில் மின்னூட்ட நிலையங்கள் அமைக்கும் பணி | 200.00 |
| | **மொத்தம் (ஆ)** | **760.00** |

இந்நிலையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தற்பொழுது நிர்வாக வசதிக்காக 5 மண்டலங்கலாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . திடக்கழிவு மேலாண்மை மற்றும் காற்றின் மாசுபாடு நீக்க பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் பின்வரும் அட்டவணை – 3ல் கண்டுள்ள கூடுதல் வாகனங்களுக்கு ரூ.937.00இலட்சம் நிதி தேவைப்படுகிறது.

அட்டவணை –3

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு (ரூ. லட்சங்கள்) |
|---|---|---|
| 1. | மினி ஜெட்ராடர் இலகுரக வாகனம் – 5 எண்கள் ( 4 Wheeler) வழங்கும் பணி | 176.00 |
| 2. | கனரக டிப்பர் வாகனம் – 5 எண்கள் வழங்கும் பணி | 150.00 |
| 3. | ஜெட்ராடர் கனரக வாகனம்–4 எண்கள் வழங்கும் பணி | 300.00 |
| 4. | டீ–சில்ட் கனரக வாகனம் – 3 எண்கள் வழங்கும் பணி (NALLA Cleaning vehicle) | 123.00 |
| 5. | ஜே.சி.பி (JCB) – 2 எண்கள் வழங்கும் பணி | 80.00 |
| 6. | 8 க.மீ கொள்ளளவுள்ள காம்பாக்டர் வாகனம் – 2 எண்ணிக்கை வழங்கும் பணி | 76.00 |
| 7. | 1.1 க.மீ கொள்ளளவுள்ள காம்பாக்டர் தொட்டி (GI) – 100 எண்ணிக்கை வழங்கும் பணி | 32.00 |
| | **மொத்தம்** | **937.00** |

2021–22ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நிதி ஒதுக்கீடு 22.00 கோடிக்கு மிகையாக 25.40 கோடிக்கு Bio Remediation பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏ ற்பட்டதன் காரணமாக, பற்றாக்குறை நிதி ரூ340.00 இலட்சம் ஏற்பட்டுள்ளது.

2020–21ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் அட்டவணை –1ல் கண்டுள்ள வ.எண்.9ல் குறிப்பிட்டுள்ள பணியினை கைவிடுத்திடவும் , வ.ண்.10ல் கண்டுள்ள பணியில் 70 எண்ணிக்கைக்கு பதிலாக 56 எண்ணிக்கை மட்டும் வாங்கிடவும் உத்தேசிக்கப்படுகிறது. இதன் காரணமாக மொத்தம் ரூ .382.00 இலட்சம் மீதம் கிடைக்கும் . 2020 –21ம் நிதியாண்டின் மீதத்தொகை ரூ.382.00 இலட்சத்தில் இருந்து 2021–22ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் ரூ .25.40 கோடிக்கு Bio Remediation மேற்கொள்ள உத்தே சிக்கப்பட்டுள்ளதில் ஏற்பட்ட பற்றாக்குறை நிதி ரூ.340.00 இலட்சத்தை ஈடு செய்தது போக ரூ.42.00 இலட்சம் மீதம் உள்ளது. (விபரம் பின்வருமாறு)

மேலும் 2021–22ம் ஆண்டு காற்றின் தரம் மேம்பாடு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு 11.00 கோடியில் ரூ .7.60 கோடிக்கு மட்டுமே நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது. மீதம் ரூ .340.00 இலட்சத்திற்கு கருத்துரு சமர்பிக்கப்பட வேண்டியுள்ளது.

**அட்டவணை –4**

| 15வது நிதி | தலைப்பு | பெறப்பட்ட நிதி | மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள பணிகள் | மீதமுள்ள நிதி | கைவிடப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள பணிகள் | ஆக மொத்தம் மீதமுள்ள நிதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (3– 4) | 6 | 7 (5+6) |
| 2020 – 21 | திடக்கழிவு மேலாண்மை | 2100.00 | 2078.00 | 22.00 | 361.00 | 383.00 |
| 2021 – 22 | | 2200.00 | 2540.00 | –340.00 | 0.00 | –340.00 |
| | **மொத்தம்** | **4300.00** | **4618.00** | **–318.00** | **361.00** | **43.00** |
| 2020 – 21 | காற்றின் தரம் மேம்படுத்துதல் | 2100.00 | 2101.00 | –1.00 | 0.00 | –1.00 |
| 2021 – 22 | | 1100.00 | 760.00 | 340.00 | 0.00 | 340.00 |
| | மொத்தம் | **3200.00** | **2861.00** | **339.00** | **0.00** | **339.00** |
| | | | | | **ஆக மொத்தம் மீதமுள்ளது** | **382.00** |

தற்பொழுது மேற் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகளின் விபரம் மற்றும் நிதி ஆதாரம் கீழ்கண்டுள்ளவாறு அட்டவனைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை –5**

| வ எண் | தற்பொழுது மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப் பட்டுள்ள பணி | நிதி ஆதாரம் | மீதமுள்ள நிதி | தேவைப்படும் நிதி |
|---|---|---|---|---|
| 1. | ஜே.சி.பி (JCB) – 1 எண் வாங்குதல் பணி | திடக்கழிவு மேலாண்மை 20 –21 & 21 –22 | 43.00 | 40.00 |
| 2. | ஜே.சி.பி (JCB) – 1 எண் வாங்குதல் பணி | காற்றின் தரம் மேம்படுத்துதல் 20 –21 & 21 –22 | 339.00 | 40.00 |
| 3 | மினி ஜெட்ராடர் இலகுரக வாகனம் – 5 எண்கள் ( 4 Wheeler) வழுங்கும் பணி | | | 176.00 |
| 4 | டீ–சில்ட் கனரக வாகனம் – 3 எண்கள் வழுங்கும் பணி (NALLA Cleaning vehicle) | | | 123.00 |
| | | **மொத்தம்(அ)** | **382.00** | **379.00** |
| 5 | கனரக டிப்பர் வாகனம் – 5 எண்கள் வழுங்கும் பணி | திடக்கழிவு மேலாண்மை 2022 –23 | 2200.00 | 150.00 |
| 6 | ஜெட்ராடர் கனரக வாகனம்–4 எண்கள் வழுங்கும் பணி | | | 300.00 |
| 7 | 8 க.மீ கொள்ளளவுள்ள காம்பாக்டர் வாகனம் – 2 எண்ணிக்கை வழுங்கும் பணி | | | 76.00 |
| 8 | 1.1 க.மீ கொள்ளளவுள்ள காம்பாக்டர் தொட்டி (GI) – 100 எண்ணிக்கை வழுங்கும் பணி | | | 32.00 |
| | | **மொத்தம்(ஆ)** | **2200.00** | **558.00** |
| | | | **ஆக மொத்தம் (அ +ஆ)** | **937.00** |

மேற்கண்டுள்ளவாறு அட்டவணை – 3ல் கண்டுள் ள வாகனங்கள் வாங்கிட தேவைப்படும் ரூ.937.00இலட்சத்தினை 2020–21 மற்றும் 2021–22ம் நிதி ஆண்டில் பெறப்பட்ட ரூ .7500.00 இலட்சத்தில் அட்டவணை – 4ல் கண்டுள்ள மீதமுள்ள நிதி ரூ .382.00 மற்றும் 2022–23ம் நிதி ஆண்டில் பெறப்பட்ட திடக்கழிவு மேலாண்மை நிதி ரூ .2200.00 இலட்சத்திலிருந்து அட்டவணை– 5ல் கண்டுள்ள கணக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு உட்பட்டு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. அட்டவணை– 5ல் கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

2. 2020–21 மற்றும் 2021–22ம் நிதி ஆண்டில் பெறப்பட்ட ரூ .7500.00 இலட்சத்தில் அட்டவணை– 4ல் கண்டுள்ள மீதமுள்ள நிதி ரூ .382.00 மற்றும் 2022–23ம் நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்துள்ள திடக்கழிவு மேலாண்மை நிதி ரூ .2200.00 இலட்சத்திலிருந்து மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு அனுப்பியதை அனுமதிக்கலாம்.

**இ5/11549/2021(மையம்)**

**தீர்மானம் எண்: 63 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**மேயர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**